Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :195 வைகாசி 29ஆம் நாள் வியாழக்கிழமை 11 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## பொதுத்தேர்தல் ஓகஸ்ட் 5இல்

### 196 ஆசனங்களுக்காக 7,452 பேர் போட்டி



கொழும்பு, ஜூன் 11

கொரோனா காரணமாக இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று வெளியிட்டார். 03

## இணுவில், ஏழாலையில் எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 11

இந்தியப் புடைவை வியாபாரியோடு தொடர்பில் இருந்த இணுவில், ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த 28 பேருக்கும் தொற்றில்லை என்று பி.சி.ஆர் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. எனினும் அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 03

## ராஜிதவுக்கு பிணை!

கொழும்பு, ஜூன் 11

சர்ச்சைக்குரியவெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்புத் தொடர்பில் கடந்த மே 13ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ராஜித சேனாரத்ன மீண்டும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் குறித்த பிணை உத்தரவு நேற்று வழங்கப்பட்டது.

கடந்த வரு 03

## ஜூன் 29ஆம் திகதியே மேலதிக வகுப்புக்கள்!

கொழும்பு, ஜூன் 11

ஜூன் 29ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புக்களை நடத்த முடியும் என்று அரசு அறிவித்துள்ளது.

100 மாணவர்களுக்கு உட்பட்ட வகையில் மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் ஜூன் 15ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பின்னர் அந்த முடிவு ஜூன் 29ஆம் திகதியாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாகவிகாரை மீது நேற்று கல்வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாகவிகாரையின் கண்ணாடி மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோர் கல் வீசித் தாக்கு 03




## ஒற்றுமையை விரும்பாதோரின் சதியே கல்வீச்சுத் தாக்குதல்

### விகாராதிபதி சாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இன ஒற்றுமையை விரும்பாதவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். மக்கள் குழப்பமடையத் தேவையில்லை - இவ்வாறு நாகவிகாரையின் விகாராதிபதி சிறி விமல தேரர் தெரிவித்துள்ளார்.

நாகவிகாரை கண்ணாடி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விகாரையில் சிறிய தாக்குதல் 03

## 50 பேருடன் வழிபட ஜூன் 12 முதல் அனுமதி

கொழும்பு, ஜூன் 11

கொரோனாப் பரவல் ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளதை அடுத்து மதத் தலங்களில் வழிபாடுகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 03

## மடுப் பெருவிழாவிலும் கட்டுப்பாடு தொடரும்!

### மன்னார் ஆயர் இம்மனுவல் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 11

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி இம்முறை மடு மாதா பெருவிழா முன்னெடுக்கப்படும். இதன்படி திருவிழாத் 03

## வாள் முனையில் நகை அபகரிப்பு!

### அம்பனையில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தெல்லிப்பழை அம்பனைச் சந்திக்கு அண்மையாகவுள்ள வீடொன்றிலிருந்து 32 பவுண் நகைகளும், 25 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டார் தெரிவித்ததாவது:

வீட்டின் பின்புறமாகவுள்ள தோட்டத்தில் நாய் குரைக்கும் சத் 03

### தமிழ், முஸ்லிம்களிடம்

## வாக்குகளுக்காக கையேந்தோம்!

### ராஜபக்ஷக்களின் சகா விமல் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 11

'வாக்குகளுக்காக ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ், முஸ்லிம் மக்களிடம் நாம் கையேந்தவில்லை. அதேபோல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களிடம் கையேந்தமாட்டோம். அவர்கள் விரும்பினால் எமது வெற்றியின் பங்குதாரர்களாக மாறலாம்' இவ்வாறு தெரிவித்தார் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீர 03



நிதி ரீதியாக வலிமையான தலைமைத்துவத்தின் நிழலில்,
வாழ்க்கை எப்போதுமே ஒளிமயமாகும்.



Fitch தரப்படுத்தல் விருதுக்கான AAA(lka) FitchRatings
அந்தஸ்தினை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் மீளவும் தக்கவைத்துள்ளது.

எம் மீது நம்பிக்கை வைத்தமைக்கும், இந்த உன்னத விருதினை நாம் சுவீகரிப்பதற்கும் இந்த வரையறுக்கப்பட்ட தருணத்தில்கூட கைகோர்த்து நிற்கும் எமது வாடிக்கையாளர்களை தலைவணங்குகிறோம்

உங்கள் ஆயுள் காப்புறுதிக்கான இணையற்ற சேவை, நன்மைகள் மற்றும் அதிகபட்ச வருமானத்தை தொடர்ந்தும் பெற்றுத்தர நாம் உறுதியளிப்பதோடு, காப்புறுதி உரிமைக்கோரல்களுக்கு மதிப்பளித்து மாதாந்தம் ரூபா. 1.5 பில்லியனை வழங்குகிறோம்..

எம்மோடு கைகோர்த்து மனதுக்கு மட்டில்லா அமைதியை வழங்கும் ஒரு நித்திய தலைவரின் நிழலின் மகிழ்ச்சியில் திளைத்திருங்கள்.

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸ்
இல.21, வொக்ஸ்வொல் வீதி, கொழும்பு 2.
தொ.பே - 0112 357 357 :.பக்ஸ் - 0112 447 742
இணையம் - www.srilankainsurance.com

Sri Lanka Insurance
Sri Lanka Insurance MotorPlus

உடன் அழைப்பிற்கு - (011) 2 357 357

# கொரோனா 1,863

கொழும்பு, ஜூன் 11
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 4 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 863ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 65 பேர் நேற்றுக் குணமடைந்துள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 122ஆக உயர்வடைந்துள்ளது. இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 730 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். இதேவேளை, மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 62 பேர் கண்காணிப்பில் உள்ளனர். (ம-22)

## இணுவில்...

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து இந்தியாவுக்குச் சென்ற புடைவை வியாபாரி ஒருவருக்கு , கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த வியாபாரியோடு தொடர்புகொண்டிருந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 13 பேரிடம் இருந்தும் நேற்றுப் புதன்கிழமை மேலும் 15 பேரிடம் இருந்தும் மாதிரிகள் பெறப்பட்டு பி. சி. ஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. சோதிக்கப்பட்ட 28 பேருடைய மாதிரிகளின் அடிப்படையில் எவருக்கும் தொற்றில்லையென்று தெரியவந்துள்ளது. (ம-105)

## ராஜிதவுக்கு...

டம் நவம்பர் 10ஆம் திகதி இடம்பெற்ற வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு வழக்கு தொடர்பில், முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு கடந்த டிசம்பர் 24ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அவர், டிசம்பர் 26ஆம் திகதி லங்கா தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். எனினும் அவர் டிசம்பர் 27ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதோடு, டிசம்பர் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
வைத்தியசாலையில் தொடர்ந்தும் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு டிசம்பர் 30ஆம் திகதி, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க உத்தரவிட்டது. ஆயினும், குறித்த நீதிவான் நீதிமன்றத்தின் பிணை உத்தரவை எதிர்த்து, சட்டமா அதிபரினால் கடந்த ஜனவரி 8ஆம் திகதி மீளாய்வு மனு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.
குறித்த மனுவுக்கு அமைய, கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த மே 13ஆம் திகதி அவரது பிணையை இரத்துச் செய்வதாக அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டிருந்தார்.
அதே தினத்தில் குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையான ராஜித சேனாரத்ன கைதுசெய்யப்பட்டு, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு மே 27ஆம் திகதி வரை விளக்கமறியல் விதிக்கப்பட்டது.
இவ்வழக்கு தொடர்பில் கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, குறித்த பிணை மனு பரிசீலனையை மற்றுமொரு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு, சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து கடந்த மே 27ஆம் திகதி குறித்த வழக்கை கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றுவதாக லங்கா ஜயரத்ன அறிவித்தார்.
அன்றையதினம் கொழும்பு மேலதிக நீதிவான்பிரியந்தலியனகேமுன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட ராஜித சேனாரத்னவுக்கு நேற்று வரை மீண்டும் விளக்கமறியலை நீடித்த நீதிவான், நேற்று அவரது பிணை தொடர்பான முடிவை அறிவிப்பதாக அறிவித்திருந்தார். அதற்கமைய முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ராஜிதவுக்குப் பிணையை மறுப்பதற்கு எந்தக் காரணங்களும் இல்லை என்றும் நீதிவான் குறிப்பிட்டார்.
ராஜித சேனாரத்னவுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே. வி. தவராசா, அனில் சில்வா ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ம-22)

## ஒற்றுமையை...

இடம்பெற்றுள்ளது. வேண்டத்தகாதவர்களால் இந்தச் சம்பவம் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகின்றேன்.
யாழ்ப்பாணத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற வேறுபாடின்றியே அனைத்து இன மக்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்டு வருகின்றோம். இந்த இன ஒற்றுமையைக் குழப்புவதற்காக சிலரால் இந்தச் சம்பவம் நடத்தப்பட்டிருக்கலாம்.
பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தென்பகுதியில் உள்ள பௌத்த மக்கள் இது தொடர்பில் குழப்பமடைய வேண்டாம். இந்த விடயத்தைப் பெரிதாக்க வேண்டாம். இனவாதத்தைத் தூண்டும் சிலரால் இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம், என்றார். (ஓ.5,111)

## வாக்குகளுக்காக...

வன்ச. நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளது. இந்தநிலையில் தேர்தல் குறித்து நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாங்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிரிகள் அல்லர். அவர்கள்தான் எம்மை எதிரிகளாகப் பார்க்கின்றார்கள். அதனால்தான் அவர்களின் ஆதரவுக்காக ஜனாதிபதித் தேர்தலில் நாம் காத்திருக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களின் ஆதரவை வேண்டிநிற்க நாம் தயாரில்லை. ஏனெனில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு இன்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை பொதுமக்கள் முன்னணி பெறும்.
ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்தார்கள். ஆனால், தமிழ், முஸ்லிம் மக்களால் அவரை வெல்லவைக்க முடிந்ததா? வடக்கு, கிழக்கிலுள்ள 80 வீதத்துக்கும் அதிகமான தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தும் இறுதியில் அவர் படுதோல்வியே அடைந்தார். இன்று அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்துகூடத் தூக்கிவீசப்பட்டுள்ளார். வேறுவழியின்றி முகவரியற்ற ஒரு கட்சியில் பொதுத்தேர்தலில் அவர் போட்டியிட வேண்டிய நிலைமை வந்துள்ளது.
ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான பௌத்த சிங்கள மக்கள் கோத்தாபய ராஜபக்சவுக்கே வாக்களித்து அவரை அமோக வெற்றியடைய வைத்தார்கள். எனவே, அவர் தலைமையிலான இந்த அரசையும் பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தனித்து ஆட்சியமைக்கும் வகையில் பௌத்த சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள். அவர்களின் வாக்கு பொதுமக்கள் முன்னணியின் 'தாமரை மொட்டு' சின்னத்துக்கே. அதுவே இலங்கை அரசியல் வரலாற்றின் வெற்றிச் சின்னமாகும்' - என்றார். (ம-22)

## வாள்...

தம் கேட்டது. வீட்டின் முன்கதவை திறந்து வெளியில் சென்று பார்த்தபோது யாரையும் காணவில்லை. அதற்கிடையில் கொள்ளையர்களில் ஒருவன் வீட்டுக்குள் புகுந்து விட்டான். வீட்டிலிருந்தவர்களின் கழுத்தில் வாளை வைத்து அச்சுறுத்தினான்.
இதன் பின்னர் மேலும் 4 கொள்ளையர்கள் வீட்டினுள் புகுந்தனர். எல்லோரையும் வாள் முனையில் அச்சுறுத்தி அமர்த்திவிட்டு தேடுதல் நடத்தினர். 32 பவுண் நகைகளையும், 25 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து விட்டுத் தப்பிச் சென்றனர். அவர்கள் துணியால் தமது முகத்தை மூடிக்கட்டியிருந்தனர் என்று குறிப்பிட்டனர். (ம-ஓ.5,26)

## மடுப்...

திருப்பலி மட்டும் இம்முறை இடம்பெறும். பொதுமக்கள் வீடுகளில் இருந்தவாறு நேரலையில் திருவிழாத் திருப்பலியைக் காணலாம் இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் ஆயர் இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை.
மடுத் திருவிழா தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, மடுபரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், குரு முதல்வர் ஏ.விக்டர் சோசை அடிகளார், மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் குணபாலன் உட்பட பாதுகாப்பு அதிகாரிகள், சுகாதாரமற்றும் முக்கியதிணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-60)

## நாகவிகாரை...

தல் நடத்தியுள்ளனர். விகாரையின் கண்ணாடிகள் சில உடைந்துள்ளன. இது தொடர்பில் பொலிஸார் மிகத் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
நாகவிகாரையின் முகப்பில் வீதியோரத்தில் அமைந்துள்ள புத்தர் சிலை கண்ணாடிக் கூண்டினுள்ளே வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கண்ணாடிக் கூண்டின் மீதே கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து வழமைக்கு மாறாக அந்த இடத்தில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர். பொலிஸார் விசாரணைகளை துரிதமாக ஆரம்பித்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஓ.5,111)

## பொதுத்...

தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸ் கட்டுக்குள் வந்து விட்டது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உத்தரவாதம் வழங்கினால் 30 - 35 நாள்களுக்குள் தேர்தலை நடத்த முடியும் என கூறியிருந்தேன். ஆனால், இது தொடர்பில் மாறுபட்ட கோணத்தில் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. அதாவது இறுதி நோயாளி குணமடையும் வரையில் தேர்தலை நடத்த முடியாது என்று நான் கூறியதாக ஒரு அரசியல் கட்சியால் தொடர்ச்சியாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.
தேர்தலை நடத்துவதற்காகவே தேர்தல்கள் ஆணைக்குழு இருக்கின்றது. எனினும், கொரோனா காரணமாகவே திட்டமிட்ட அடிப்படையில் நடத்த முடியாமல் போனது. மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நாம் இழுத்தடிக்கவில்லை. அதற்கு நாடாளுமன்றமே பொறுப்புக் கூறவேண்டும். தேர்தலை நடத்துவதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.
எனவே, ஜூன் 20ஆம் திகதி நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை ஓகஸ்ட் 5ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரும் ஒருமனதாக தீர்மானித்தோம் என்றார்.
அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் 196 ஆசனங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும், சுயேச்சைக்குழுக்களில் இருந்தும் 7 ஆயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அரசியல் கட்சிகளின் சார்பில் 3 ஆயிரத்து 652 பேரும், 617 சுயேச்சைக்குழுக்களின் சார்பில் 380 பேரும் இம்முறை களமிறங்கியுள்ளனர். (ஓ,5,44,22)

## 50 பேருடன்...

இதன்படி இந்த மாதம் 12ஆம் திகதி முதல் 50 பேருக்கு உட்பட்ட வகையில் மத வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# கொட்டகலையில் விபத்து இளைஞர் ஒருவர் இறப்பு!

கொழும்பு, ஜூன் 11

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பண்ணைக்கு அருகாமையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

ஹட்டன் பகுதியைச் சேர்ந்த 28 வயதான மனோகரன் கணேஷ் என்பவரே உயிரிழந்தவராவார். கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாரான ஓட்டோவொன்றில், வேகக்கட்டுப்பாட்டை இழந்து அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. இதையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கிவீசப்பட்ட அவர் வீதிக்கு அருகில் இருந்த எல்லை நிர்ணயக் கல்லுடன் மோதியே உயிரிழந்தார். (ம)

# சௌபாக்கியா திட்டத்துக்கு யாழில் 12,117 விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

சௌபாக்கியா விரைவுபடுத்தப்பட்ட தேசிய உணவு உற்பத்தி திட்டத்துக்கு 12 ஆயிரத்து 117 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளனர் என்று வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

தற்போது அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'சௌபாக்கியா' விரைவுபடுத்தப்பட்ட தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காயச் செய்கை பெருமளவு மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அதிகளவான விவசாயிகள் வெங்காய செய்கைக்காக விண்ணப்பித்துள்ளார்கள். மொத்தமாக 7 ஆயிரத்து 31 பேர் வெங்காய செய்கைக்காக விண்ணப்பித்திருக்கும், அதேநேரத்தில் மற்றைய பயிர்களுக்கு விண்ணப்பித்தோர்களையும் சேர்த்து 12 ஆயிரத்து 117 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளார்கள்.

அதாவது மொத்த பரப்பளவு 5 ஆயிரத்து 990 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் விண்ணப்பித்துள்ளார்கள் அதற்கு ஏற்படக்கூடிய செலவாக 518 மில்லியன் ரூபா கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிர்களின் உற்பத்தியை நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்வதாக அரசு அறிவித்துள்ளது. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவது தொடர்பில் கவலையடைய தேவையில்லை. இந்த வெங்காயத்துக்கான சந்தை வாய்ப்பு தற்போது கூடுதலாக காணப்படுகின்றது. நிச்சயமாக எமது எதிர்பார்ப்பின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து எமக்கு சின்னவெங்காயம் மிகக் குறைந்த அளவிலேயே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

எமது வடக்கு விவசாயிகளுக்கு வெங்காய உற்பத்தியானது பெரும்பயனாக அமையும் விவசாயிகளின் உற்பத்திக்கும் கூடிய சந்தை வாய்ப்பு கிடைக்கும் என அரசால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. விவசாயிகள் எந்தவித தயக்கமும் இல்லாது குறித்த சௌபாக்கிய வேலைத்திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் தமது பொருளாதாரத்தை முன்னேற்றிக்கொள்ள முடியும் - என்றார். (எ-ரி1)

# சங்கிலிய மன்னனின் 401 ஆவது ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

சங்கிலிய மன்னனின் 401 ஆவது ஆண்டு நினைவு நாளின் நீத்தார் கடன் நிகழ்வுகள் வெள்ளி, மற்றும் சனிக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன என்று சிவசேனை அமைப்பின் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

வடக்கே கீரிமலை தொடக்கம் தெற்கே கதிர்காமம்வரை மேற்கே உடைப்புத் தொடக்கம் கிழக்கே கல்முனை வரை பல்வேறு ஊர்களில் ஆறுகள் குளங்களில் கடல் ஓரத்தில் மன்னன் சங்கிலியனுக்கு நீத்தார் கடன் செய்ய பலர் முன்வந்துள்ளனர். கொவிட் 19 தொற்று பரவாமல் தடுப்பதற்காகச் சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு நீத்தார் கடன் நிகழ்வுகளில் ஒருவர் அல்லது இருவர் பங்கேற்பர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் தோப்பு சங்கிலியன் சிலைக்கு மாலை அணிவிக்க ஏணி வசதிகளை யாழ் மாநகரசபை செய்துள்ளது. மாலை அணிவித்த பின் யமுனா ஏரி சென்று மலர் தூவி வழிபட மூத்த குடிமக்கள் வருவர்.

சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கீரிமலைக் கடற்கரை தொடக்கம் கதிர்காமம் மாணிக்க கங்கை வரை இலங்கை முழுவதும் பல்வேறு நீர் நிலைகளில் நீத்தார் கடன் நிகழ்வுகள் நடைபெறும். சைவ சமய முறைப்படி நடைபெறும் இந்த நிகழ்வுகளில் சைவக் குருமார் பங்கேற்பர். இல்லத்தில் இருந்தவாறே இந்த ஆண்டு சங்கிலியன் நினைவு நீத்தார் கடன்களை மேற்கொள்ளுமாறு சைவத் தமிழ் அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம். கூட்டமாகக் கூடி நீத்தார் கடன்களைச் செய்வது பொருத்தமானதல்ல-என்றுள்ளது. (ப)

# ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தைத் திறவுங்கள்

## குறிஞ்சாக்கேணி மக்கள் கோரிக்கை

திருகோணமலை, ஜூன் 11

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கற்குழியில் சுமார் 4 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தேடுவாரற்று பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச கட்டடம் பயனற்ற விதத்தில் காணப்படுவதால் அதற்குள் சமூக விரோத செயல்கள் இடம்பெறலாம். பல்வேறு தேவைகளுக்காகவும், அரச தேவைகளுக்காகவும் கட்டடங்கள் பற்றாக்குறையாகக் காணப்படும் நிலையில், இந்தப் புதிய கட்டடத்தை சமூகம் பயனடையக்கூடிய வகையில் திருத்தியமைக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-ரி2)

# சீனத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை!

கொழும்பு, ஜூன் 11

கொவிட்19 வைரஸ் தொற்றுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்தி சீனத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று புதன்கிழமை இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கொவிட்19 வைரஸ் தொற்றுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்தி சீனத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. இது தொடர்பான தகவல்களைப் பெற்ற பொலிஸார் ஆர்ப்பாட்டத்துக்கான தடை உத்தரவை மன்றில் கோரியிருந்தனர். இந்த நிலையில் மன்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வயல் காணிகளில் இடம்பெற்ற பெரும் மண் அகழ்வு முற்றுகை

## *100 'லோட்டு'க்கும் அதிக மணல் கும்பிகள் மீட்பு*

கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளம் பகுதியில் இடம்பெறும் பெரும் மண் அகழ்வு நடவடிக்கை முற்றுகையிடப்பட்டது. கிராம அலுவலரினால் பொலிஸ் நிலையத்தில் மெற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக அப்பகுதிக்குச் சென்ற விசேட பொலிஸ் குழுவினால் குறித்த பகுதி முற்றுகையிடப்பட்டது. இதன்போது விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்த சுமார் 100 லோட்டுக்கும் அதிகமான மணல் கும்பிகள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டன.

கனகராயன் ஆற்றுபகுதி மற்றும் அதனை அண்டிய வயற்காணியில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் பொது மக்களால் கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரனுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடு வழங்கப்பட்டது. முறைப்பாட்டுக்கு அமைவாக கிராமத்துக்குப் பொறுப்பாக உள்ள கிராம அலுவலரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டை அடுத்தே இந்த மணல் அகழ்வு தடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் பகுதியை கண்டாவளை பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். அப்பகுதியில் முறையற்ற வகையில், அனுமதியற்ற மணல் அகழ்வு இடம்பெற்று வருவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த மணல் அகழ்வு தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் சம்மந்தப்பட்ட திணைக்களங்களின் கவனத்துக்கு கொண்டு செல்ல உள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்று மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு நாள்களுக்கு முன்னர் தருமபுரம் 5 ஆம் யுனிற் பகுதிக்கு பின்பக்கமாக உள்ள வயல் காணிகளில் மணல் அகழ்ந்து விற்பனை செய்யப்படுவதாகவும் அதனைத் தடுக்குமாறும் விளைநில உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் கடற்கரை மற்றும் குளங்களை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வானது தற்போது வயல் நிலங்களை நோக்கி இடம்பெறுகின்றுது என்று குற்றஞ்சாட்டப்படுகிறுது. (ப-6)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாக்களிக்க வரவழையுங்கள்!

ஒரு வழியாக ஓகஸ்ட் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டார். இந்தத் திகதியை அறிவிப்பதற்கிடையில் ஆணைக்குழுவுக்கே நாக்குத் தள்ளுமளவுக்கு காரசாரமான விவாதங்கள், பரிந்துரைகள், ஒத்திகைகள் என நிறைய விடயங்கள் நடந்தேறிவிட்டன. பின்னர் அவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்த பின்னரே இறுதியாக ஓகஸ்ட் 5ஆம் திகதியைத் தேர்தல் தினமாக ஆணைக்குழு இறுதி செய்துள்ளது.

ஆனாலும் இம்முறை வழக்கமான தேர்தல் நடைமுறைகளில் இருந்து பெரும் மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். குறிப்பாக பரப்புரைக் கூட்டங்களை வரையறை செய்வதுடன், அந்தக் கூட்டங்களுக்கு அனுமதிக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கையும் இம்முறை மட்டுப்படுத்தப்படவுள்ளது. இதனால் இதுநாள்வரை எலிகளாக இருந்துவிட்டு, மேடையில் ஏறி புலிகளாக மாறி வாய்ச் சவாடல் விட்டு, மக்களை மூளைச்சலவை செய்து வாக்குகளை அள்ளுகின்ற காரியமெல்லாம் இனிமேல் வேலைக்காகாது. அத்தோடு வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்திப்பதும் முன்னரைப் போல இனிமேல் செய்யமுடியாது. யார், யாரெல்லாம் கொரோனாக் காவியாக இருப்பார்களோ என்ற பயத்தில், பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகளுக்குள் தேர்தலில் வாக்குச் சேகரிக்க வருவோரை அனுமதிப்பார்களா என்பதும் கேள்விக்குறியே. இதனால் பெரிய கட்சிகள் மாத்திரமன்றி சிறிய கட்சிகளின் ஒட்டுமொத்த பரப்புரை வியூகங்களையும் இந்தமுறை அடியோடு மாற்றியமைத்தால் மட்டுமே வெற்றியை எட்டிப் பிடிக்கலாம் என்ற நிலையே இப்போது.

வழக்கமாக தேர்தல் என்றாலே தென்னிலங்கைத் தேசியக் கட்சிகள் காலிமுகத்திடலில் ஒரு பிரமாண்டமான கூட்டத்தை நடத்தி, பல்லாயிரக்கணக்கானோரை அழைத்து வந்து 'மாஸ்' காட்டுவதுண்டு. இப்படி பல்லாயிரக்கணக்கானோரின் திரள்கை, உளவியல் ரீதியாக குறித்த கட்சியின் ஆதரவாளர்களிடத்தும், ஏனையோரிடத்தும் எழுச்சியை உண்டாக்கி, வாக்களிப்பு வீதத்தைக் கூட்டும். ஆனால் இந்தமுறை அதற்கெல்லாம் வாய்ப்பேயில்லை.

இப்படி மூடப்பட்ட பிரசார நடவடிக்கைகள் ஆளும் தரப்புக்கே அதிக அனுகூலத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே பெரும்பாலான அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் ஆளும் தரப்பின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இனி அவையெல்லாம் கோரஸாக 'அரச துதி'யை மட்டுமே திரும்பத் திரும்பப் பாடி, மக்களின் மனங்களில் அவற்றை பதியச் செய்யும் முயற்சியிலும் ஈடுபடப்போகின்றன. இதுதவிர கொரோனா காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் கொடுப்பனவு உள்ளிட்ட நிவாரண உதவிகளையும், கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் சொல்லிக் காட்டியே இன்னும் அதிக வாக்குகளை அறுவடை செய்யவும் அரசால் முடியும். ஆனால் எதிரணியினருக்குத்தான் இப்படியான எந்த வாய்ப்புமில்லை. அவர்கள் என்னதான் பெருங்குரலெடுத்து அரசின் அடக்குமுறைகளையும், மக்கள் விரோதப் போக்கையும், சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்துவது பற்றியும், மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவையும் சொன்னாலும் கூட அது மக்களின் காதுகளில் விழாதவாறு செய்யுமளவுக்கு அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டது அரசு. எல்லாவற்றுக்கும் கொரோனா என்ற சாயத்தைப் பூசிவிடுவதால் எவரும் எதிர்க்கேள்வி கேட்கமுடியாத நிலை.

சரி, இப்படிப்பட்ட மூடுண்ட பிரசாரக் களத்திலும் கட்சிகள் ஓடியாடி தீயாக வேலை செய்தாலும் கூட, முன்னரைப் போல வாக்களிப்பு வீதம் அதிகமாக இருக்குமா என்பதும் சந்தேகமே. ஏதோ கடமைக்காகத்தான் பலரும் வாக்களிக்கும் நிலையில், இம்முறை கொரோனா அச்சுறுத்தலைக் காரணம் காட்டி பலரும் வாக்களிக்கச் செல்லத் தயங்கவே செய்வர். எனவே இம்முறை கட்சிகள் தங்களுக்கு வாக்களிக்கச் சொல்வதை விடவும், கட்டாயம் எல்லோரும் வாக்களிக்க வரவேண்டும் என்பதை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் தான் அதிக அக்கறை காட்ட வேண்டும். இல்லாவிட்டால் வாக்களிப்பு நிலையங்கள் வெறிச்சோடி, வரலாற்றில் என்றுமில்லாத வாக்களிப்புவீதச் சரிவு ஏற்படக்கூடும். அதைத் தடுப்பது அரசினதும், கட்சிகளினதும் முதல் கடமை.

# மண்டைதீவில் படுகொலையான மீனவரின் 34ஆம் ஆண்டு நினைவு

குருநகர், ஜூன் 11

**மண்டைதீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் 31 பேரின் 34 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று குருநகரில் இடம்பெற்றது.**



குருநகர் கடற்கரை வீதியில் உள்ள தூயஒளி நினைவுத் தூபியின் முன்பாக நேற்றுக் காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் இறந்த மீனவர்களின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர். படுகொலை செய்யப்பட்ட மீனவர்களுக்கு தூபியின் முன்பாக மலர் தூவி, விளக்கேற்றி செபமாலை வழிபாடு செய்தனர். அஞ்சலி நிகழ்வில் யாழ் மாநகர சபையின் முன்னாள் மாநகர முதல்வர் இம்மனுவேல் ஆனல்ட் கலந்து கொண்டிருந்தார்.

(ப-51)



## பழைய இடத்துக்கே மாறியது பரு. சந்தை

பருத்தித்துறை, ஜூன் 11

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை மீண்டும் பழைய இடமான நவீன சந்தை மேல் மாடிக் கட்டடத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் இயங்கி வருகின்றது.

கொரோனா தொற்றுநோய் நாட்டில் பரவியதைத் தொடர்ந்து இச் சந்தை மூடப்பட்டது. மரக்கறி வியாபாரிகள் நகரில் பல வீதிகளிலும் பொது வெளிகளிலும் மரக்கறிகளை விற்பனை செய்து வந்தனர். மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் பருத்தித்துறை நகர சபையினால் சந்தைக் கட்டிடம் சீரமைப்புசெய்யப்பட்டு மீளத்திறக்கப்பட்டது.

சீரமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தையை நகர சபைத் தலைவர் திறந்து வைத்தார் சந்தைக்குள் மரக்கறிகள், பழவகைகள், வெற்றிலை, தேங்காய் போன்ற பொருள்களுக்கு தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. திறக்கப்பட்ட சந்தையை நகரசபைத் தலைவர் யோ. இருதயராஜா பார்வையிட்டு வியாபாரிகளிடத்தில் நிலவரங்களைக் கேட்டறிந்தார். சந்தையில் வியாபாரிகள் மத்தியில் சமூக இடைவெளி பேணப்பட்டது. கொரோனாத் தொற்றுநோய் தடுப்பு தொடர்பாக அறிவுறுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சந்தைக்கு உட்செல்ல வெளிச் செல்ல தனித்தனிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-173)

## உற்பத்தித்திறன் விருதுக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

இந்த வருடத்துக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய உற்பத்தித்திறன் செயலக இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் விண்ணப்ப முடிவு திகதி கடந்த மார்ச் 31ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டித் தொடருக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித்தொடருக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதிக்கு முன்னர் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துக்கு கிடைக்கக்கூடியவாறு தங்கள் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத் துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் இந்தப் போட்டித் தொடருக்கு விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வை கடந்த மார்ச் 2ஆம் திகதிவரை மூன்று பிரிவுகளாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(கு)

# வீடுகளில் கள் விற்பனை; உரிய நடவடிக்கை பாயும்!

### வலிகாமம் கொத்தணியின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

சீவல் தொழிலாளர்கள் மரங்களில் இருந்து இறக்கப்படும் இந்தக் கள்ளை அனுமதி இன்றி சட்டவிரோதமாக வெளியில் விற்கக்கூடாது என்று பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடரங்குச் சட்டம் நீக்கப்பட்டு வழமையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீவல் தொழிலாளர்கள் பனை தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் கள்ளை தவறான முறையில் அனுமதி இன்றி வெளியில் விற்கக் கூடாது. சீவப்படும் கள்ளு யாவும் கள் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு கள்ளை விற்பனை நிலையங்களுக்கு வழங்காது சட்டவிரோதமாக வெளியில் வைத்து விற்றால் உரிய சீவல் தொழிலாளி மீது சங்கங்கள் நடவடிக்கையை மேற்கொள்ளும் - என்றார்.

(ஐ-17)

# இறுதிக்கிரியை வேறு ஆர்ப்பாட்டம் வேறாம்

## ரோஹித விளக்கம்



**கொழும்பு, ஜூன் 11**
**காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியையும், அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தையும் தொடர்புபடுத்தி கருத்துரைக்க முடியாது. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையாக செயற்படுத்தப்படும்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணித்த அமெரிக்க இராஜதந்திரி தொடர்பில் உரிய விசாரணை இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுக்கப்படுகிறது. அமெரிக்கத்தூதரகத்தின் முன்பாக முன்னிலை சோசலிச கட்சியினர் முன்னெடுத்த போராட்டம் தவறான செயற்பாடாகும். கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவது பொறுப்பற்ற செயற்பாடாகும். நீதிமன்றம் போராட்டத்துக்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே பலர் கைது செய்யப்பட்டார்கள்.

காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்வதற்கு பெரும்பாலான மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டபோது தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்படவில்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது. அமெரிக்க தூதரகத்தின் முன் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கும், ஆறுமுகம் தொண்டமானின் இறுதிக் கிரியைக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை.

இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்கள் எவரும் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்குள்ளாகவில்லை. அனைத்து நடவடிக்கைகளும் சுகாதார தரப்பினரது பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமையவே இடம் பெற்றன. என்றார். (எ)

## சொய்சாபுர சூட்டு சம்பவம்; சாரதி கைது

கல்கிஸை, ஜூன் 11

கல்கிஸ்ஸை சொய்சாபுரபிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டலொன்றின் மீது அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பிலியந்தலை பிரதேசத்தில் நேற்று இரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி2)

## கருணாவின் பதாகைக்கு தீ வைப்பு

கொழும்பு, ஜூன் 11

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான வி.முரளிதரனுக்கு ஆதரவு தெரிவித்து கல்முனைப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பதாகைகள் இனந்தெரியாதவர்களால் நேற்று அதிகாலை எரியூட்டப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனைவாழ் இளைஞர்கள் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் வி.முரளிதரனுக்கு 35 அடி நீளமான பதாகைகளைக் கட்டியிருந்தனர். அந்தப் பதாகையே எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-ரி2)


## ஓ.எல். மாணவர்களுக்கு இலத்திரனியல் ஆங்கிலக் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட இலத்திரனியல் ஆங்கில ஊக்கிக் கற்கைநெறி நேற்றுமுன்தினம் வெளிடப்பட்டது.

கொரோனாத் தொற்றால் உருவாகிய அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட கல்வித் தடங்கல்களைச் சீர் செய்யவும் துரித கதியில் க.பொ.த (சா/த) ஆங்கில பாடத்திட்டத்தை மீட்டிக்கொள்ள உதவும் வகையிலும் இலத்திரனியல் ஆங்கில ஊக்கிக் கற்கை நெறி வெளியிடப்பட்டது.

இந்தக் கற்கைநெறி திறந்த மூல உரிமத்தின் கீழ் முற்றிலும் இலவசமாக வெளியிடப்படுகிறது. இந்தக் கற்கை நெறியை http://www.edudept.np.gov.lk எனும் இணையத்தள முகவரியில் இருந்து இலவசமாகப் பதிவிறக்கம் செய்யலாம். மேலும் YouTube இல் https://youtube.com/c/lmdmunit இன் வழியாகப் பார்வையிட்டுப் பயனடையலாம். கற்கை நெறியை நீங்கள் மடிக் கணினி, டப்லட் (Tablet), ஸ்மார்ட் செல்லிடத் தொலைபேசி போன்ற பல்வேறு ஊடக இயந்திரங்கள் மூலம் செயற்படுத்தலாம். உங்களிடம் இணையத் தொடர்பு இல்லாவிடில் 32 GB பென்டிரைவ் ஒன்றைக் கொள்வனவு செய்து எமது கற்கை நெறியை அதில் தரவிறக்கிக்கொள்ள முடியும். எமது மாகாணத்தில் ஸ்மார்ட் தொலைக் காட்சிப் பெட்டிகள் பரவலாகப் பாவனையில் உள்ள ஓர் கருவி ஆகும். உங்கள் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆங்கில மொழிக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் அல்லது ஆசிரிய ஆலோசகர் ஆங்கில ஊக்கிக் கற்கை நெறியைப் பென்டிரைவில் பதிவிறக்கிக் கொள்ள உங்களுக்கு உதவுவார். தனிப்பட்ட பரீட்சார்த்தியாக சாதாரண தர ஆங்கிலமொழிப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு இந்தக் கற்கை நெறியானது அதிக உதவியாக இருக்கும் என்று கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப)



## இணையத்தின் ஊடாக வாகன வரிப் பத்திரம்

வவுனியா, ஜூன் 11

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இணையத்தின் ஊடாக வாகன வரி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வசதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வாகனவரி அனுமதிப் பத்திரங்களைப் பெறுபவர்கள், மாவட்டச் செயலகத்திற்குள் வைக்கப்பட்டுள்ள தானியங்கி இயந்திரத்தில் தமது விண்ணப்பங்களைச் செலுத்தி 14 நாள்களுக்குச் செல்லுபடியாகக் கூடிய தற்காலிக வரி அனுமதிப்பத்திரத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதன் அசல் பத்திரம் 14 நாள்களுக்குள் வாகன உரிமையாளரது வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையமூடாக விண்ணப்பிப்பவர்கள், மின்அஞ்சல் முகவரி, புகைப் பரிசோதனை சான்றிதழ், வாகனப் பதிவுச் சான்றிதழ், காப்புறுதிப் பத்திரம், இறுதியாகப் பெற்ற வரிப்பத்திரம் ஆகிய சான்றிதழ்களைக் கொண்டு இணையமூடாக விண்ணப்பிக்கமுடியும். இதன் மூலம் விடுமுறை தினங்களிலும் வாகன வரி அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-110)

## அமெரிக்காவும் வழங்கியது பாதுகாப்பு உபகரணங்கள்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையின் கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான போராட்டத்துக்கு உதவும் வகையில் அமெரிக்கா சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடைப் பொருள்களை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவிடம் கையளித்தார். இந்த நன்கொடை கொவிட் - 19 இற்கு எதிரான போராட்டத்துக்கு உதவும் "அனைத்தும் அமெரிக்கா" செயற்திட்டத்தின் ஓரங்கமாகவே வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதியுதவியின் கீழ் 48,000 இற்கும் அதிகமான முகக் கவசங்கள், பாதுகாப்புக் கையுறைகள், பாதுகாப்பு அங்கிகள் என்பனவையே நன்கொடையாக வழங்கப்பட்டிருப்பதுடன், கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நலிவடைந்திருக்கும் நாட்டின் வணிக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இப்பொருள்கள் அனைத்தும் இலங்கையிலேயே கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன.

"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்போரைப் பாதுகாப்பதற்கு முன்நின்று செயலாற்றிவரும் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உதவ முடியுமாக இருப்பதையிட்டுப் பெருமையடைகின்றோம். இந்த நன்கொடைப் பொருள்களை வழங்கும் அதேவேளை, இலங்கையின் வணிக நடவடிக்கைகளை வலுப்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்வது இருநாடுகளினதும் ஆழமான நட்புறவுக்கு ஓர் அடையாளமாகும்" என்று தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை கொவிட் 19 இற்கு எதிராகப் போராடும் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக இத்தகைய உதவியை வழங்கிய அமெரிக்காவுக்கு தனது நன்றியை வெளிப்படுத்தியிருக்கும் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, அவசர சுகாதார நிலைமைகள் ஏற்படுகையில் அதற்குத் தயார்நிலையில் இருப்பதற்கு இத்தகைய பாதுகாப்பு உபகரணங்கள் மிகவும் அவசியமானவையாகும் - என்றும் குறிப்பிட்டார். (ப)

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 11
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்றும் நாளையும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

**யாழ்ப்பாண மாவட்டத்தில்**
சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி, அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டிபிள்ளையார் கோவிலடி, அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும் -

**வவுனியா மாவட்டத்தில்**
துட்டுவாகை ஒரு பகுதி, கூமாங்குளம கிராமம், பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார்மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, ஒமேகா லைன், வவுனியாதொழில்நுட்பகல்லூரி. சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஶ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, சந்திரிக்கா அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்-

**மன்னார் மாவட்டத்தில்**
ஓலைத்தொடுவாய், செம்மண்தவிலிருந்து நானாட்டான் வரை,அறுகுகுன்று, அளவாக்கை, எருவிட்டான், பள்ளங்கோட்டை,முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை -

**கிளிநொச்சி மாவட்டத்தில்**
ஒதியமலை, பெரியபுலம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா மாவட்டத்தில்**
சாளம்பைக்குளம் ஒரு பகுதி,கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், தவசிகுளம் கிராமம், புளி தறித்தபுளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு ஆகிய இடங்களிலும்

**மன்னார் மாவட்டத்தில்** வட்டுபித்தன் மடு, புதுக்காமம், ஓலைத்தொடுவாய் ஆகிய பிரதே சங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் டெங்குத் தொற்று குறைந்துள்ளது

## சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு



**சாவகச்சேரி, ஜூன் 11**

**பொதுமக்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் குறைந்துள்ளன. பொதுமக்கள் இவ்வாறு தொடர்ந்து தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் டெங்குவின் தாக்கத்தை பிரதேசத்தில் குறைக்க முடியும் என பிரதேச மக்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார்.**

நாட்டில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதையடுத்து வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த மூன்று தினங்கள் (ஜூன் 8 ,9 ,10). டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் டெங்குவின் தாக்கம், அதிகம் காணப்பட்ட மந்துவில், கொடிகாமம் மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார் மற்றும், டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் , கிராமிய சுகநல மேம்பாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகள் போன்றோர் கடந்த முன்று தினங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் தரிசிப்புகளை மேற்கொண்டனர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர்ஏந்து பொருள்கள் காணப்படவில்லை. இதேவேளை காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய குப்பைகள் காணப்பட்ட 50க்கு மேற்பட்டோருக்கு காணிகளைத் துப்புரவு செய்ய இருவார கால அவகாசம். வழங்கி அறிவித்தல்கள் வழங்கியுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், சாவகச்சேரி நகரசபையினர் மற்றும் பிரதேச சபையினர் இணைந்து கடந்த மே 22ஆம் திகதி தொடக்கம் கடந்த எட்டாம் திகதி (08.06) வரை பிரதேசத்தில். உள்ள 7 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவுகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர் ஏந்து பொருள்களை உரப் பைகளில் கட்டி வாகனம் வரக்கூடிய வீதிகளில் வைக்குமாறு அறிவித்தனர். இந்த நடவடிக்கைக்கு மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். இவ்வாறான நிலையிலேயே சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார். மேற்கண்டவாறு தெரிவித்தார். (ப-9)

# பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனம் குடைசாய்ந்து விபத்து

வவுனியா, ஜூன் 11
வியாபார நிலையங்களுக்கு பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. வாகனத்தின் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



இந்த விபத்து வவுனியா மடுக்கந்தைப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து ஹெப்பிட்டிக்கொலாவ பகுதியை நோக்கி பொருள்களைக் கொண்டுசென்ற வாகனம் மடுக்கந்தை பாடசாலைக்கு முன்பாக நடுவீதியில் திடீரென்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுக்கந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

# அம்பாறையில் மொட்டு மலரும்

## உலமா கட்சித் தலைவர் உறுதி

அம்பாறை, ஜூன் 11
அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையே பெற்றுக் கொள்ளும். அந்தக் கட்சியால் அம்பாறை மாவட்டத்தில் களமிறக்கப்பட்டவர்களுக்கு மக்கள் சரியான தீர்ப்பு வழங்குவார்கள்.

இவ்வாறு உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு கட்சிக்கு அதிக பட்சமாக வாக்கு கிடைத்தாலும் சரி விகிதாசார அடிப்படையில் மாவட்டத்தில் வெல்லுகின்ற கட்சிக்கு சுமார் நான்கு உறுப்பினர்கள் கிடைக்கும் என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அந்த மாவட்டத்தை வெல்லப்போகும் கட்சி முஸ்லிம் வாக்குகளைப் பெற்றாலும்கூட முழு மாவட்டத்தை வென்றாலும் 4 உறுப்பினர்கள் தான் கிடைக்கும். இதுதான் தலைவிதி. இவ்வாறு அம்பாறைத் தொகுதியில் மட்டும் நான்கு உறுப்பினர்களைப் பெறுவதாக இருந்தால் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து அறுபதினாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற வேண்டும். ஆனால் இத்தேர்தலில் சஜித் கூட்டணி வெற்றிபெறாது என்பது முஸ்லிம் காங்கிரஸின் சாதாரண போராளி உட்பட அனைவருக்கும் தெரியும். இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சி பிரிந்து தனியாகத் தேர்தலில் நிற்பதாகும்.

சஜித் தலைமையிலான கூட்டணி வெல்லக்கூடிய சாத்தியம் இல்லை. அம்பாறை மாவட்டத்தை வெல்லக்கூடியது பொது ஜன பெரமுன என்பது தான் உண்மை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி அம்பாறை தேர்தல் தொகுதியில் மட்டும் கிட்டத்தட்ட எண்பதாயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தது. எனவே மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் வாக்குகளை இக்கட்சி எடுக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால் மூன்று ஆசனங்களைப் பெறும் -என்றார். (ஐ)

# ஜெயபுரம் மக்களின் 385 ஏக்கர் நிலத்தை அவர்களுக்கே வழங்க ஆளுநர் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜூன் 11
கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் பகுதியில் உள்ள ஜெயபுரம் மக்களின் 385 ஏக்கர் நிலத்தையும் அவர்களிடமே வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் பரிந்துரைத்துள்ளார்.

ஜெயபுரம் பகுதியில் குடியி ருப்பதற்கு நிலம் வழங்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்த நீண்டகாலமாக வனவளத் திணைக்களம் தடையாக இருந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் நீண்டகாலமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முயற்சித்தும் இறுதித் தீர்வு எட்டாத நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய ஆளுநர் அது தொடர்பில் ஆராய்ந்து குறித்த 385 ஏக்கரையும் அந்த மக்களிடமே வழங்க சிபார்சை முன்மொழிந்ததோடு நிலம் வழங்கிய காலத்தில் இரண்டு ஏக்கர் வழங்கியபோதிலும் தற்போது ஒரு ஏக்கரே வழங்க முடியும் என்பதால் பெற்றோருக்கு ஒரு ஏக்கரும் அவர்களது பிள்ளைகளின் பெயரில் ஒரு ஏக்கருமாக உரிய நிலத்தை வழங்க முடியும் எனவும் குறித்த அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகிய இரு இடங்களுக்கும் பரிந்துரைத்துள்ளார். (ஐ-105)

# ஆட்சியைக் கைப்பற்றவே போட்டியிடுகிறது ஐ.தே.க.

## கூறுகிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 11

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதான போட்டி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலானதாகவே இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருப்பதற்கல்ல, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கே போட்டியிடுகிறது என்று ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஐ.தே.கவை விட்டு யார் விலகிச் சென்றாலும் கட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அதனால் விலகிச் சென்றவர்கள் தொடர்பில் அக்கறை செலுத்தாது கட்சிக்குள் தற்போது இருக்கும் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே போதும். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே தீர்வு காணமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மிகப் பழைமை வாய்ந்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே. ஐ.தே.க. பல தேர்தல்களில் தோல்வியுற்றிருந்தாலும் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. எப்போதும் முன்னேறிச் செல்லவே முயற்சித்திருக்கின்றது. தற்போது நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமே பிரதான கட்சிகளாக இருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் இந்த இரு கட்சிகளுக்கிடையிலேயே பிரதான போட்டி இடம்பெறப்போகின்றது. நாங்கள் எதிர்க்கட்சியாக வருவதற்கல்ல ஆட்சியைக் கைப்பற்றுவதற்கே முயற்சித்து வருகின்றோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது, பொருளாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புகளில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற மக்களுக்குநிதியுதவியையோ சலுகைகளையோ பெற்றுக்கொடுக்காமல் இருக்கின்றது. மார்ச் மாதத்துக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது இல்லை. அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் பாடமொன்றைக் கற்றுக்கொண்டுள்ளோம். இதுவரையில் ஐ.தே.க. தனித்து யானைச் சின்னத்திலும், பொதுக்கூட்டணி அமைத்து அன்னம் சின்னத்திலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளது. இதன்போது பலர் வெற்றி கொண்டுள்ளதுடன் தோல்வியுற்றாலும் கிடைக்கப்பெற்ற வாக்கு வீதங்களில் பெரும் வித்தியாசம் ஏற்பட்டதில்லை. ஆனால் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலேயே ஜனாதிபதி கோத்தாபய் ராஜபக்ஷ எம்மைவிட 14 இலட்சம் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி கொண்டுள்ளார். இதற்கான காரணம் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து பார்த்ததில் இவ்வளவு காலமும் ஐ.தே.க.வுக்கு ஆதரவாக வாக்களித்த பலரும் கோத்தாபயவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. இதனால் மீண்டும் இந்தப் பிழையை விடுவதற்கு நாங்கள் விரும்பவில்லை - என்றார். (ப)

# தொழிற்சங்கத்தின் மீது வழக்குத் தாக்கல்; வெட்கப்பட வேண்டிய விடயம்

## முன்னாள் எம்.பி. வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

அரசியல் கட்சியொன்று தொழிற்சங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், அரசியல் பழிவாங்கலுக்காக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் யாப்பை மீறி நடவடிக்கை எடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகளிலிருந்து எம்மை இடைநீக்கியுள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு தனியான யாப்பு காணப்படுகிறது. இந்தச் சங்கத்தில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இந்தச் சங்கம் அதன் யாப்பிற்கமைய சட்ட ரீதியாக நடத்திச் செல்லப்படுகிறது. எனவே யார் எந்தத் தீர்மானத்தை எடுப்பதாக இருந்தாலும் அரசமைப்பிற்கு அமையவே எடுக்க வேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஹரின் பெர்னாண்டோ இந்தச் சங்கத்தின் தலைவராகவும் நாம் பொதுச் செயலாளராகவும் செயற்குழுவினால் நியமிக்கப்பட்டோம். இந்த நிலையில் அரசியல் பழிவாங்கலுக்காக எம்மீது குற்றஞ்சுமத்தி சிலர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய போதும் 2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய போதும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் அந்த வேட்பாளர்களின் வெற்றிக்காகவே செயற்பட்டது. அதேபோன்றே இம்முறையும் செயற்பட்டது. இவ்வாறிருக்கையில் எம்மை பதவியிலிருந்து நீக்குவதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும்?.

அரசியல் பழிவாங்கலுக்காக எம்மைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. அரசியல் கட்சியொன்று தொழிற்சங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இவ்வாறான தொழிற்சங்கங்கள் இன்றி ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்ய முடியாது- என்றார். (ப)



# சுகாதார முறைகளைப் பின்பற்றாத பேருந்துகள் மீது இனி சட்டம் பாயும்

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றாமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மின்வலுத்துறை மற்றும் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்த மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன. சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்திய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அமையவே போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கும் போது குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் 95 சதவீதம் பின்பற்றப்பட்டுள்ளன. பேருந்து, ரயில்களில் பயணிகள் ஆசனங்களில் அமர்ந்தவாறு பயணம் செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஒரு சில பேருந்து உரிமையாளர்கள் இந்த நிபந்தனைகளை மீறியுள்ளார்கள். இவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் துறையினரது சேவையை காலை 10 மணிக்கு ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி உரிய தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

போக்குவரத்துச் சேவையில் ஈடுப்படும்போது பின்பற்ற வேண்டிய கட்டாய பாதுகாப்பு நிபந்தனைகளால் தாம் பெரிதும் பாதிக்கப் படுகிறோம் என தனியார் பேருந்துச் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார்கள். தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிவாரணம், இலகு வட்டியிலான கடனுதவி, மற்றும் காப்புறுதி ஆகியவற்றை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். எக்காரணிகளுக்காகவும் தற்போது நடைமுறையில் உள்ள பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்க முடியாது. எனவும் ஜனாதிபதி தெரிவித்தார் - என்றார். (ப)

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும்

## அமைச்சர் விமல் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

எதிர்க்கட்சிகள் மற்றும் நாட்டுக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படும் தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

மஹிந்த தேசப்பிரிய, ரட்ணஜீவன் ஹூல் ஆகிய இருவரும் இரு பாத்திரங்களை ஏற்று நடித்தாலும் அவர்களின் இலக்கு ஒன்று தான் எனவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலின்போதுகூட தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வேட்புமனுவை நிராகரிக்க வேண்டும் என எவ்வித அடிப்படை காரணிகளும் இன்றி ஹூல் வாதிட்டுள்ளார். எனவே, அவர் ஏதோவொரு அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுகின்றமை உறுதியாகின்றது.



நாட்டில் தேர்தலை நடத்தும் பொறுப்பு மூவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் இல்லாவிட்டால்கூட கூட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

நாட்டிலுள்ள தேர்தல் ஆணைக்குழு சுயாதீன நிறுவனமாக செயற்படவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன். ரட்ணஜீவன் ஹூலின் அறிவிப்பையடுத்து தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். புதியவர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை அரசமைப்புச் சபைக்கு வழங்கியிருக்க வேண்டும். வெட்கம், ஆத்ம கௌரவம் இருந்தால் இதனையே அவர்கள் செய்ய வேண்டும்.

ரட்ணஜீவன் ஹூல்போன்றவர்களைப்பாதுகாத்துக் கொண்டு தான் சுயாதீனமானவர் என்று காட்டிக்கொள்வதற்கு ஆணைக்குழுவின் தவிசாளர் முயற்சிக்கின்றார்- என்றார். (க-44)



சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு

## மருத்துவச் சான்றிதழ் பெறுவதில் மக்கள் சிரமம்

வவுனியா, ஜூன் 11

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு வவுனியா தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்துக்குச் செல்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள், சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கச் செல்பவர்கள் மற்றும் சாரதிகளுக்கான பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கு வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை தேசிய போக்குவரத்து திணைக்களத்தின் கீழான வைத்திய நிறுவனத்துக்குச் செல்பவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு காக்க வைக்கப்படுகின்றனர் எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்காக அதிகாலை வவுனியா தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்துக்குச் செல்பவர்கள் நீண்டநேரம் காத்திருந்தும் மருத்துவ சான்றிதழைப் பெறாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் அதிகளவான மக்கள் செல்கின்றபோதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலானோரே உள்வாங்கப்படுகின்றனர். இதனால் நேற்று மக்களுக்கும், அலுவலர்களுக்கும் இடையே சற்று குழப்பநிலை ஏற்பட்டிருந்ததுடன், பொலிஸார் வருகை தந்து நிலைமையை சுமுகமாக்கினர். எனவே இவ்வாறான சிரமங்களைத் தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-110)

## மதகு சீரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சி பிரதேசத்தில் இடரால் சேதமடைந்த மதகை சீரமைக்க இடர்காப்பு முகாமைத்துவ அமைச்சால் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சரசாலை வடக்கு தெய்வங்கேணி வீதியில் அமைக்கப்பட்டிருந்த மதகு கடந்த மழையின்போது சேதமடைந்து பொதுமக்கள் வீதியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இயற்கை இடரால் மதகு சேதமடைந்ததால் அமைச்சு 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# பொதுத்தேர்தலின் பின்னர் சிறிகொத்த எங்கள் வசம்!

### சஜித் சபதம்



கொழும்பு, ஜூன் 11

பொதுத்தேர்தல் வெற்றியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவையும் கைப்பற்றுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு இத்தருணத்தில் உறுதிமொழியொன்றை வழங்குகின்றோம். அதாவது பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதும், மக்கள் வழங்கிய ஜனநாயக தீர்ப்பின் பிரகாரம் சிறிகொத்தவின் பொறுப்பையும் ஏற்போம்.

உண்மை ஒருபோதும் தோற்காது. எமது வேட்புமனு தொடர்பில் வெளியான நீதிமன்ற தீர்ப்பு இதனை உறுதிப்படுத்துகின்றது. எதிர்வரும் நாள்களிலும் சில சம்பவங்கள் இடம்பெறலாம். சவால்களையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக தேர்தலை எதிர்கொள்வோம். எமது கட்சியில் 'டீல்' அரசியலுக்கு இடமில்லை - என்றார். (ஐ-44)



## சட்டவிரோத மணல் அகழ்வு: வாகரையில் அறுவர் கைது

வாழைச்சேனை, ஜூன் 11

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு பேர் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பனிச்சங்கேணி வன இலாகா காட்டுப் பகுதியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ். தணிகாசலம் தலைமையில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் அந்தப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களது மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1,150)

## செயலமர்வுக்கான தகவல் திரட்டல்!

கொடிகாமம், ஜூன் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வுகள் மற்றும் தொழிற் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான தகவல் திரட்டலை கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் முன்னெடுத்துள்ளது

தரம் 9, 10 கற்றவர்கள், க.பொ.த சாதாரணம் கற்றவர்கள், க.பொ.த உயர்தரம் கற்றவர்கள் மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்கள் தகவல்களை பதிவு செய்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் திரட்டுப் படிவத்தை அந்தந்தப் பகுதி பொருளாதார அபிவிருத்தி அலுவலரிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலதிக விவரங்களை 0778049166 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது. (எ-ரி1,159)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 15 பேர் கைது!

திருகோணமலை, கும்புறுப்பிட்டி மற்றும் இறக்கண்டியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 15 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கும்புறுபிட்டி கட்றபரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 7 பேர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை திருகோணமலை இறக்கண்டி பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் நேற்றுமுன்தினமும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து அங்கீகாரமளிக்கப்படாத இரு மீன்பிடி வலைகள், இரு டிங்கி படகுகள் மற்றும் பிற மீன்பிடி பொருள்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 வயது தொடக்கம் 44 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், நிலாவெளி மற்றும் இறக்கண்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது. (எ-ரி1)

# மாலைதீவிலுள்ள இலங்கையருக்கு உதவிப்பொருள்கள் அனுப்பிவைப்பு

மாலைதீவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினூடாக மாலி மற்றும் மாலிக்கு வெளியிலிருக்கும் இலங்கைச் சமூகத்தினருக்கு விநியோகிக்கும் பொருட்டு, உலர் உணவுப் பொருள்கள் உட்பட 10 ஆயிரம் கிலோ (2 ஆயிரம் பொதிகள்) அத்தியாவசியப் பொருள்களை வெளிநாட்டு உறவுகள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் சரக்கு விமானத்தினூடாக கட்டணங்கள் எதுவுமின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை இலவசமாக இந்த உதவிப் பொருள்கள் மாலைதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. உதவிப் பொருள்கள் ஒவ்வொன்றும் 18 பொருள்களை உள்ளடக்கியதுடன், அதில் உடனடி உணவுப் பொதிகள் மற்றும் சுகாதாரப் பொருள்கள் போன்ற அடிப்படைப் பொருள்கள் மற்றும் சமூகத்தால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளும் அடங்கியுள்ளன.

சுமார் 7 ஆயிரம் இலங்கையர் தற்போது மாலைதீவிலிருந்து மீள நாடு திரும்ப எதிர்பார்த்துள்ளதுடன், அவர்களுள் கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் கிரேட்டர் மாலியில் காணப்படுகின்றனர். இலங்கையர்கள் புறப்படுவதற்கு முன்னர், பணம் செலுத்தும் அடிப்படையில் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள மாலைதீவு அதிகாரிகளுடன் வெளிநாட்டு உறவுகள் அமைச்சு ஏற்கனவே கலந்தாலோசனைகளில் ஈடுபட்டுள்ளது. பெரும்பாலான தலைநகரங்களில், இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் மூலமாகவும், இலங்கைச் சமூகத்தைச் சேர்ந்த சங்கங்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்தும் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவப் பொருள்களை வழங்குவதனூடாக வெளிநாடுகளில் குடியேறிய சமூகங்களுக்கு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றன. நாட்டுக்கு மீளத் திரும்பிவர எதிர்பார்ப்போரை மீள அனுப்பி வைப்பதற்கான பணிகளில் தொடர்ந்தும் உதவிவரும் அதே வேளையில், சாத்தியமான சந்தர்ப்பங்களில் குறித்த இடங்களில் ஏற்படும் மருத்துவ அவசரநிலைகளுக்கும் அவர்கள் உதவிகளை மேற்கொள்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# இலங்கையே! விழித்துக்கொள் இராக்கனவு விரிவடைகிறது

## போராட்ட முடக்கம் பற்றி மங்கள சமரவீர காரசார கருத்து

**கொழும்பு, ஜூன் 11**

**அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிட்டவர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, பிமல் ரத்நாயக ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். 'இலங்கையே, விழித்துக்கொள். ஓர் இராக்கனவு விரிவடைந்துகொண்டிருக்கிறது' என்று மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.**



நிராயுதபாணியான கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் மினிசோட்டா மாநிலத்தின் மினியாபோலிஸ் நகரில் வெள்ளையின பொலிஸ்காரர் ஒருவரால் முழங்காலால் கழுத்து நசுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து, அமெரிக்கா உட்பட உலகின் பல பாகங்களிலும் இந்தச் சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவிக்கும் விதமாக பெரும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் வெளியிடும் வகையில், கடந்த திங்கட்கிழமை முன்னிலை சோசலிஸக் கட்சி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக அமைதிப்போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு எதிராக ஆரம்பத்திலேயே பொலிஸாரால் நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்பட்டிருந்த நிலையில், அதனைமீறி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது. பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, பிமல் ரத்நாயக்க ஆகியோர் தமது டுவிட்டர் பக்கங்களின் ஊடாக கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

மங்கள சமரவீர வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், அமைதிவழியில் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மிருகத்தனமானதும் வெட்கக்கேடானதுமான விடயமாகும். பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணியும் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் புதிய செயலணியின் மூலம் உருவாக்க முயற்சிக்கும் நல்லொழுக்கமுள்ள சமுதாயம் இதுதானா? இலங்கையே, விழித்துக்கொள். ஓர் இராக்கனவு விரிவடைந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தனது டுவிட்டர் பக்கத்தில்,

அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும், அவர்கள் கைதுசெய்யப்பட்டமையும் கடும் கண்டனத்துக்குரியதாகும். அமெரிக்கப் பிரஜையொருவரால் வெள்ளை மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடியுமெனில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக எதிர்ப்பை வெளியிடுவது எவ்வாறு அத்துமீறுலாகக் கருதப்பட முடியும்?

'இரட்டைக் குடியுரிமை ஆட்சியாளர்கள்' தாம் அமெரிக்க அரசையும்விட மேலான அமெரிக்கர்கள் என்பதைக் காண்பிக்கிறார்கள்' - என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். (த)

# அமைதியற்ற போராட்டமாக பொலிஸார்தான் மாற்றினர்

## அத்துரலிய ரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 11

சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி அமெரிக்க தூதரகத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிஸாரே அமைதியற்ற போராட்டமாக மாற்றியமைத்தனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அமெரிக்க தூதரகம் முன்பாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போராட்டத்தில் முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க பொலிஸாரால் கொல்லப்பட்ட கறுப்பு இனத்தவரான ஜோர்ஜ் புளோய்ட்டினின் இறப்புக்கு நியாயம் கோரியும். அமெரிக்காவில் தற்போது சிவில் சமூகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் முன்னிலை சோசலிச கட்சி மற்றும் சமூக ஆர்வலர்களின் அமைப்பால் நேற்று முன்தினம் அமெரிக்க தூதரகத்தின் முன்னாக அமைதி வழி போராட்டம் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்க தூதரகத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கியுள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டமை முற்றிலும் தவறான செயற்பாடாகும். இருப்பினும் பொது காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பட்சத்தில் ஒரு சில காரணிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். சுகாதார பாதுகாப்பை காரணம் காட்டி பேச்சு சுதந்திரம் முடக்கப்படுகின்றது. பொதுமக்கள் தங்களின் அரசியல்கருத்துக்களையும், பொது கருத்துக்களையும் சுதந்திர மாக குறிப்பிடுவதற்கு அரசு தடை விதிக்க முடியாது. தற்போதைய செயற்பாடுகள் எவ்வாறான நிலைக்கு அடித்தளமிடுகிறது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். அனைத்து காரணி களையும் அடிப்படையாகக் கொண்டு பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை எடுப்பது அவசியமாகும்- என்றார். (த)

# போராட்டம் தடுக்கப்பட்டதற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை!

## அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்

கொழும்பு, ஜூன் 11

அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக, நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்தை தடுக்குமாறு இலங்கை அதிகாரிகளிடம் தாங்கள் கோரவில்லை என்று அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு உள்ள உரிமையை மதிப்பதாக கூறியிருக்கும் அமெரிக்க தூதுவர், அமெரிக்காவில் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்த போதும், அங்கு அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் காரணம் காட்டியே கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் தடுத்துள்ளனர் என்றும், அமெரிக்க தூதரகத்தின் கோரிக்கைக்கு அமைய இது தடுத்து நிறுத்தப் படவில்லை என்றும், அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெளிவுபடுத்தியுள்ளார். (த)

# உர விநியோகம், பயன்பாடு பற்றி விவசாயிகளின் சிக்கலை தீர்க்கவும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 11



உர விநியோகம் மற்றும் பயன்பாடு தொடர்பில் விவசாய சமூகம் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உர வழங்கல் தொடர்பில் தற்போதைய நிலைமைகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பமாவதைத் தொடர்ந்து பல மாகாணங்களில் உரப் பிரச்சினை எழுகின்றது. சிறிய, நடுத்தர மற்றும் நீண்டகாலஅடிப்படையில்அதற்கு தீர்வு கண்டறியப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இரசாயன உரப் பாவனை காரணமாக மண்ணின் தன்மை பெருமளவு மாற்றமடைந்துள்ளது. அதிக அறுவடையை எதிர்பார்த்து விவசாயிகள் அதிகளவு உரத்தை பயன்படுத்திவருகின்றனர். இந்த நிலைமைகளில் இருந்து படிப்படியாக விலகி சேதன உரப் பாவனைக்கு திரும்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சிறுபோக பயிர்ச்செய்கை ஆரம்பமாவதுடன் உரப் பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது. நெல்லுக்கு அதிக விலை கிடைப்பதன் காரணமாக விவசாயிகள் பெருமளவில் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். விவசாய இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகள், தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் மரக்கறி, பழங்கள் மற்றும் தானிய பயிர்ச்செய்கை காணிகளின் அளவு அதிகரித்துள்ளமையும் உரப் பிரச்சினைக்கு காரணமாகும் என்று அதிகாரிகளும் ஆளுநர்களும் சுட்டிக்காட்டினர்.

உரத்தை பயன்படுத்த வேண்டிய முறைபற்றி விவசாயத்துறை அதிகாரிகளின் ஊடாகவும் ஊடகங்களின் வாயிலாகவும் விவசாயிகளை அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வடக்கில் விவசாயிகள் சேதன உரப் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளனர். அதன் மூலம் கிடைக்கும் அறுவடைகள் தரத்திலும் அளவிலும் அதிகம் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சாள்ஸ் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தைப் போன்று நாட்டின் ஏனைய மாவட்டங்களின் விவசாயிகளையும் சேதன உரத்தை பயன்படுத்தச் செய்வதன் மூலம் சில சுகாதார பிரச்சினைகளில் இருந்தும் விடுபட முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சேதன உரத்தை உரிய நியமங்களுடன் உற்பத்திசெய்வது குறித்து விசேட கவனம் செலுத்துமாறும், சேதன உரத்தை விரைவாக பயன்படுத்தக் கூடிய பயிர்ச்செய்கை என்னவென்று கண்டறியுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

சேதன உரப் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அறுவடைகளை கொள்வனவு செய்யும் போது அதிக விலையை நிர்ணயிப்பதற்கும் அதற்காக நிவாரணம் வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சேதன உர உற்பத்தியை பெரியளவிலான வியாபாரமாக முன்னேற்றுவதன் மூலம் இரசாயன உரத்துக்கான கேள்வியை குறைக்க முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (த)

# சுதந்திரபுரம் படுகொலையின் 22ஆம் ஆண்டு நினைவேந்தல்

## பொலிஸாரின் தடையையும் மீறி உறவுகள் கண்ணீருடன் அஞ்சலி

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு – சுதந்திரபுரம் பகுதியில் விமானத் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்ட 33 பொதுமக்களின் 22ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. கொரோனாவைக் காரணம் காட்டி நினைவேந்தல் தடுக்கப்பட்டபோதும், கொல்லப்பட்டவர்கள் உறவுகளால் நினைவுகூரப்பட்டனர்.



முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் 1998ஆம் ஆண்டு இலங்கை விமானப் படையாலும், இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதலில் 33 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான நினைவஞ்சலி நேற்றுக் கடைப்பிக்கப்பட்டது. முல்லைத்தீவு - சுதந்திரபுரம் நிறோசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதித்திருந்த நிலையில் படுகொலை செய்யப்பட்டவர்கள் சிலரைப் புதைத்த இடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொரோனாத் தொற்று சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப, கையுறை, முகக்கவசம் மற்றும் ச்மூக இடைவெளிகள் பேணப்பட்டு நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. பிரதான ஈகச் சுடரை தாக்குதலின்போது தமது குடும்பத்தில் 4 பிள்ளைகளை இழந்த தந்தையொருவர்ஏற்றினார். படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் வன்னிமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவன் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-246)

---

### சமய பாட ஆசிரியருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூன் 11
வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள உடுவில் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளில் இந்து சமயம் இந்து நாகரீகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய கேட்போர் கூடத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இந்த வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தயார்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடலில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. கொரோனாக் காலத்தில் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பல்வகைச் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்கள் அறிக்கையொன்றைத் தயாரித்து எடுத்துவருவது கலந்துரையாடலுக்கு வசதியாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி1)

---

# கொரோனாப் போர்வையில் அச்சுறுத்தும் பொலிஸார்!

## மக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, ஜூன் 11
கொரோனாத் தொற்று பரவலைக் காரணம் காட்டி பொலிஸார் மக்களை தொடர்ந்தும் அச்சுறுத்துகின்றனர்என்றுகுற்றஞ்சாட்டப்படுகிறது. இலங்கை அரசின் திட்டமிட்ட தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூரும் போதெல்லாம் பொலிஸார் இவ்வாறான அராஜகங்களில் ஈடுபடுகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுதந்திரபுரம் பகுதியில் 1998ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையினர் மற்றும் தரைப்படையினரின் கூட்டுத் தாக்குதல் நடவடிக்கையில் 33 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களுடைய 22ஆவது நினைவு தினம் நேற்றாகும். இந்த நினைவு தினத்தை கடைப்பிடிப்பதற்காக சுதந்திரபுரம் சந்தி, நிரோஜன் விளையாட்டு கழக மைதானத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் நேற்றுக் காலை அங்கு சென்ற பொலிஸார் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அந்த இடத்துக்குச் சென்றபோது அங்கு படையினர், பொலிஸார் சூழ்ந்து ஏற்பாட்டாளர்களை வெளியேறுமாறு மிரட்டியுள்ளனர். சுதந்திரபுரம் சந்திபகுதியில் நின்றிருந்த பொலிஸார் வீதியால் செல்பவர்களின் உந்துருளிகள், வாகனங்களை கடும் சோதனைகளுக்கும் உட்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன. இனப்படுகொலை நாளான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் பொலிஸார், இராணுத்தினர் தடைகளை ஏற்படுத்தி மக்களை மிரட்டியிருந்தனர். மக்கள் மட்டுமல்லாது அரசியல் தலைவர்களும் நிகழ்வுக்குச் செல்ல முடியாது திருப்பி அனுப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. (ப-19)

---

### 52 லீற்றர் கள்ளுடன் ஒருவர் கைது

கொடிகாமம், ஜூன் 11
வீட்டில் 52 லீற்றர் பனங்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டார். (ஐ-159)

---

### கொழும்பில் கைதான 53 பேருக்கும் பிணை

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தது நீதிமன்றம்.

அமெரிக்க கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்டின்கொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நீதிமன்று தடை விதித்திருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டத்தில் ஈடுபட்ட முன்னிலை சோசலிசக் கட்சிமுக்கியஸ்தர்களான குமார் குணரத்னம், துமிந்த நாகமுவ உட்பட 53 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட பின்னர், கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (எ-ரி)

---

### யாழ்.கொழும்பு இரவு பஸ் சேவையை ஒரு வாரத்துக்குள் ஆரம்பிக்க முயற்சி

வடமராட்சி, ஜூன் 11
பருத்தித்துறை - கொழும்பு இரவு நேர பஸ் சேவையை ஒருவார காலத்துக்குள் ஆரம்பிக்க பருத்தித்துறை இ.போ.ச டிப்போ நடவடிக்கை எடுத்துள்ளது.

பருத்தித்துறையில் இருந்து சகல உள்ளூர் சேவைகளும் மற்றும் கிளிநொச்சி-முல்லைத்தீவு - வவுனியா, மன்னார் -திருகோணமலை - கல்முனை ஆகிய வெளி மாவட்டங்களுக்குமான பஸ் சேவைகளும் கொழும்புக்கான பகல் சேவையும் கொரோனாவுக்குப் பின்னர் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம.73)

---

### புதையல் தோண்டினர் என மூவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஜூன் 11
வவுனியா நந்திமித்திரகமவில் உள்ள கிப்புல்கல மலைப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கிப்புல்கல மலைப்பகுதியில் புதையல் தோண்டுவதாக பொஹறவெஸ்வெள பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளதுடன் பூஜைப்பொருட்கள், பித்தளை மோதிரங்கள், புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

குறித்த கிம்புல்கல மலைப்பகுதியானது மிகவும் பழமை வாய்ந்த புராதன இடிபாடுகளைக்கொண்டது. அது தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான பகுதியாகக் காணப்படுகின்றது. (ம-110)

# அமெரிக்காவின் எதேச்சாதிகாரமே எம் நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கும்

## எம்.சி.சி., சோபா ஒப்பந்தங்கள் தொடர்பில் உதய கம்மன்பிலவின் கதறல்

**கொழும்பு, ஜூன் 11**

**நல்லாட்சி அரசாங்கம் கைச்சாத்திட முற்பட்ட எம்.சி.சி மற்றும் சோபா ஆகிய ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், தற்போது அமெரிக்காவில் சிவில் மக்களுக்கு எதிராகப் பொலிஸார் மேற்கொள்கின்ற வன்முறை அடங்கிய எதேச்சாதிகாரப் போக்கினையே எமது நாடும் எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டிருக்கும். நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உடன்படிக்கைகளுக்கு ஒருபோதும் அரசாங்கம் இடமளிக்காது என பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
அமெரிக்காவில் தற்போது இடம்பெறும் சம்பவங்கள் சிவில் சமூகத்துக்கு எதிரானதாகும். இனவாதத்தை தோற்றுவிக்கும் வன்முறைகளை அரசஅதிகாரிகள்கட்டவிழ்த்து விடப்படுகின்றமை கவலைக்குரியது. நல்லாட்சி அரசாங்கம் எம். சி. சி மற்றும் சோபா ஆகிய ஒப்பந்தங்களை கைச்சாத்திட பெரும் முயற்சிகளை மேற்கொண்டது. இவர்களின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நாட்டில் அமெரிக்க இராணுவத்தினரது செயற்பாடுகள் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்.

எம். சி. சி ஒப்பந்தத்தின் 6.8 பிரிவில் அமெரிக்க இராணுவத்தினர், அதிகாரிகள் இலங்கையில் ஏதேனும் சிவில் குற்றங்களைப் புரிந்தால் இலங்கையின் நீதிதுறையின் பிரகாரம் அவருக்குத் தண்டனை வழங்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான சாதகமான விடயங்கள் எதேச்சாதிகாரச் செயற்பாடுகளுக்கு வழி வகுக்கும்.

இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட பொதுஜன பெரமுனவினர் தடையாக இருந்ததன் காரணத்தை தற்போது அமெரிக்காவில் இடம்பெறும் மிலேச்சத்தனமான செயற்பாடுகளின் ஊடாக மக்கள் புரிந்துகொள்ள முடியும். நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தங்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணித்த அமெரிக்க இராஜதந்திரி வியன்னா ஒப்பந்தம் ஊடாக வழங்கப்பட்டுள்ள சிறப்புச் சலுகைகளைக் காரணம் காட்டுகிறார். எம்.சி.சி. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அமெரிக்க இராணுவத்தினர் நாட்டுக்குள் எதேச்சதிகாரமாக செயற்படுவார்கள். இவ்வாறான செயற்பாடுகள் பெரும் விளைவை ஏற்படுத்தும் - என்றார். (ப)


# எழுதுமட்டுவாழில் திண்மக் கழிவகற்றல்

கொடிகாமம், ஜூன் 11

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையினால் திண்மக் கழிவகற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

உரப்பைகளில் இட்டு வாய்ப்பகுதியை இறுக்கமாகக் கட்டி வைக்கப்பட்ட திண்மக் கழிவுகள், வீடுகளில் காணப்படும் நுளம்பு பெருக்கத்துக்கு வாய்ப்பளிக்கக்கூடிய உக்காத கழிவுப்பொருள்கள் போன்றன பிரதேச சபையால் எடுத்துச் செல்லப்பட்டன.

கொடிகாமம் தெற்கு ஜே328, உசன் ஜே 329, கரம்பகம் ஜே330, விடத்தற்பளை ஜே331, கெற்பேலி ஜே332, எழுதுமட்டுவாழ் தெற்கு ஜே 333, எழுதுமட்டுவாழ் வடக்கு ஜே 334, மிருசுவில் வடக்கு ஜே 335, மிருசுவில் தெற்கு ஜே 336 ஆகிய பகுதிகளில் சாவகச்சேரி பிரதேச சபையினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ப-159)



# 13 இளைஞர்கள் பளையில் கைது

கிளிநொச்சி, ஜூன் 11

சாராயப் போத்தல்களுடன் பயணித்த இளைஞர் குழு ஒன்று பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டது. கொரோனா நேரத்தில் ஒன்று கூடினர் என்ற குற்றச்சாட்டில் அந்தக் குழுவைச் சேர்ந்த 13 பேர் பளை பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து குழு ஒன்று கிளிநொச்சி நோக்கி வருவதாக கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து பளை முல்லையடிப் பகுதியில் அந்தக் குழுவினர் வழிமறிக்கப்பட்டனர். 7 மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 13 பேர் கைது செய்யப்பட்டனர். மல்லாகம், உடுத்துறை, உடுவில் மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 25 ற்கும் குறைவான வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து சுமார் 10 சாராயப் போத்தல்கள், கிளாஸ் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் பிறந்த தினத்தை கொண்டாடுவதற்காக சென்றனர் என்று தெரியவந்துள்ளது. அவர்கள் அனைவரும் நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். (ப-6)



# மத்திய பேருந்து நிலையம் முல்லைத்தீவில் திறப்பு

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையம் கடந்த திங்கட்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நகரஅபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எஸ்.கே.திஸாநாயக்க, கிழக்கு மாகாண நகர அபிவிருத்தித் திட்டமிடல் பணிப்பாளர் கெமுனு பிரேமரத்ன, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உமைமகள், முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.தயாளன், வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் எஸ். அமிர்தலிங்கம் உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மத்திய பேருந்து நிலையம், நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசாவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது. (ப-19)

# தடம்புரண்டது ஓட்டோ குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு.ஜூன் 11

நால்வருடன் பயணித்த முச்சக்கர வண்டி தடம்புரண்டதில், அதில் பயணித்த குடும்பஸ்தர் உயிரிழந்தார். இந்த விபத்து மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் மாங்கேணி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

விபத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிர் இழந்துள்ளார் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியிலிருந்து தோப்பூருக்கு தொழில் நிமித்தம் முச்சக்கர வண்டியில் நால்வர் பயணித்துக் கொண்டிருந்த வேளை, மாங்கேணி பிரதேசத்தில் வாகனம் தடம்புரண்டு விபத்து நடந்துள்ளது.

முச்சக்கர வண்டியின் சாரதியான காத்தான்குடி சாவியா வீதியைச் சேர்ந்த முஹம்மது ஹனீபா முஹம்மது இர்பான் (வயது - 31) என்பவர் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதி அப்துல் ரஹ்மான் லத்தீப் (வயது - 54) என்பவர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக வாகரை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-150)

# கல்கிஸை கடற்கரை பகுதியில் குவிந்துள்ள இறப்பர் பொருள்கள்

## அகற்றுவதற்கு நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 11

கல்கிஸை கடற்கரை பகுதியில் குவிந்துள்ள 20 டன் அளவிலான இறப்பர் உற்பத்தி பொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இறப்பர் உற்பத்தி பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் பிரபாத் சந்தீரகீர்த்தி தெரிவித்தார்.

கல்கிஸை கடற்கரை பகுதியில் மணல் நிரப்பல் வேலைத்திட்டத்தின் காரணமாகவே இந்த இறப்பர் உற்பத்திப் பொருள்கள் குறித்த கடற்கரைப் பகுதியில் குவிந்துள்ளது என எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ)

# கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூன் 11

மறவன்புலோ மேற்கு சிதம்பர சித்திவிநாயகர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும்.

ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெற இருப்பதால், அது சம்பந்தமான கலந்துரையாடலுக்கு அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு செயலாளர் இ.சிவரூபன் அறிவித்துள்ளார். (க-159)

## முல்லைத்தீவு மையத்தில் ஒருவருக்குக் கொரோனா

முல்லைத்தீவு, ஜூன் 11
முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
98 பேருக்கு மேற்கொண்ட சோதனையிலேயே அவருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-105)

## முல்லைத்தீவில்
# சர்வதேச விளையாட்டரங்கு பெயர்ப் பலகை அகற்றம்!

முல்லைத்தீவு, ஜூன் 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்வதேச விளையாட்டரங்குக்கு என்று ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடத்தில் மாவட்டச் செயலரின் அனுமதியுடன் நடப்பட்ட பெயர்ப் பலகை பொலிஸாரால் அகற்றப்பட்டது. பலகை நடப்பட்ட காணியின் உரிமையாளர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸாரால் அது அகற்றப்பட்டுள்ளது.
2016ஆம் ஆண்டு சர்வதேச விளையாட்டு மைதானம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. வட்டுவாகல் பகுதியில் 30 ஏக்கர் நிலத்தை அதற்காக கையகப்படுத்த மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்தது. அதில் 14 ஏக்கர் காணி தனியாருக்கு உரியது. அந்தக் காணியை வழங்க தனியார் மறுப்புத் தெரிவித்திருந்தனர். திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.
இவ்வாறானதொரு நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை பொது அமைப்புக்களின் பெயரில் சிலர் அண்மையில் அணுகினர். மாவட்ட நீதிமன்றுக்கு அருகில் 30 ஏக்கர் அரச நிலம் இருப்பதாகவும், அங்கே சர்வதேச விளையாட்டரங்கை அமைக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.
இதற்கு அமைவாக முன்னர் அடையாளப்படுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்த பெயர்ப் பலகை பிடுங்கி எடுக்கப்பட்டது. புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் நடப்பட்டது. இதனைச் செய்தவர்கள் முகநூலில் அதனைப் பகிர்ந்துள்ளனர். புதிய இடத்தில் பெயர்ப் பலகையை நட்டவர்களில் ஒருவர் நடைபெறும் பொதுத் தேர்தலில் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடுகின்றார். தேர்தல் காலத்தில் இவ்வாறு செய்ய அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளால் கேள்வி எழுப்பப்பட்டிருந்தன. தேர்தல்கள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான தொரு நிலையில் புதிதாக பெயர்ப் பலகை நடப்பட்ட காணியின் உரிமையாளர் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக அது அகற்றப்பட்டுள்ளது. (ஒ,5,105)


## மணிவிழா நாயகனை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.புவிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா
(ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) தீவக கல்வி வலயம்)

யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியில் முதல் நியமனமாகி 23.03.1990 தொடக்கம் 31.12.1996 வரை சிறப்பாக சேவையாற்றி பாடசாலைக்கென விஞ்ஞான ஆய்வுகூடத்தை வடிவமைத்து விஞ்ஞான பாடத்தில் சிறந்த பெறுபேறு பெறவும், கிராமிய நாடகங்கள், நவீன நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றி எமது பாடசாலைக்கென தனி முத்திரை பதித்த ஆசானை உளமார பாராட்டி வாழ்த்துவதோடு, ஓய்வு காலத்தில் உடல், உள சுகத்துடன் நிறை பணியாற்ற இறைவனின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

Congratulations

பாராட்டி வாழ்த்துவோர்
திரு. க.சசிகரன் - பிரதி அதிபர்
(யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)
திரு. சி.பத்மதாசன் - அதிபர்
(மன்/சின்ன வலயன்கட்டு அ.த.க.பாடசாலை)
திரு. இ.கோகுலன் - பிரதி அதிபர்
(யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)
திரு. V.S.ரஜீபன் - வங்கியாளர்
(தேசிய சேமிப்பு வங்கி- மானிப்பாய்)


## ஆசிரியர்களின்
# தற்காலிக இணைப்புக்கள் ஜூன் 29வரை மாத்திரமே
### கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட தற்காலிக இணைப்புக்கள், பாடசாலை ஆரம்பிக்கும் தினமான ஜூன் 29ஆம் திகதி வரையிலேயே செல்லுபடியாகும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றிய நிலையில் பல்வேறு காரணங்களுக்காக தற்காலிக இணைப்பை பெற்று இணைப்புக் காலம் முடிவடைந்தவர்கள், விடுமுறை பெற்றவர்களின் நிலைமை தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் சுட்டிக்காட்டப்பட்ட போது, அப்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு மே முதலாம் திகதியில் இருந்து மேலும் இரண்டு மாதங்களுக்கு அவை அனுமதிக்கப்பட்டன.
பிரசவ காலம், மருத்துவம் உள்ளிட்ட பல தேவைகளுக்காக ஏனைய மாவட்டத்துக்கு இணைப்புப் பெற்று பணி




யாற்றிய நிலையில் அந்தக் கால எல்லை முடிவடைந்த பட்சத்தில் மேலும் இரு மாதங்கள் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் நீடிக்கப்பட்டது.
இதேவேளை, சம்பளம் அற்ற விடுமுறைகளை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பணிக்கு திரும்ப முடியாத நிலையில் அவர்களுக்கு மேலும் இரு மாதங்கள் சம்பளம் அற்ற விடுமுறைக் காலம் முடிவடையும் போது மீள் பரிசீலனை செய்யப்படும் -என்றார். (ம-ஒ,5,105)


உ
ஸ்ரீ ராமஜயம்

## விவாக சோபன வாழ்த்துக்கள்

இன்றைய நன்னாளில் ஸ்ரீ நகுலேஸ்வரப்பெருமான், ஸ்ரீ மாவைக்கந்தன், ஸ்ரீ விஸ்வநாதப்பெருமான், ஸ்ரீ லங்நவ் விநாயகர், ஸ்ரீ கோப்பாய் முத்துமாரி அம்பாள் திருவருட் துணையுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்ரஹணம் செய்யும்

வேரற்கேணி மட்டுவிலைச் சேர்ந்த
குமாரசாமிக்குருக்கள் மீனாட்சியம்மா
தம்பதியரின் பௌத்திரியும்
மாவிட்டபுரம் தாணு ஐயர் மீனாட்சியம்மா
தம்பதியரின் தௌஹித்திரியும்
எமது ஏக புத்திரியுமான
**சௌபாக்கியவதி ராஜினி**

நகுலேஸ்வர ஆதீனத்தை சேர்ந்த
கார்த்திகேயக்குருக்கள் சாரதாம்பாள்
தம்பதியரின் பௌத்திரனும்
மாவை ஆதீனம் துரைச்சாமிக்குருக்கள்
விசாலாட்சியம்மா தம்பதியரின் தௌஹித்
திரனும் எமது ஜேஷ்ட புத்திரனுமான
**சிரஞ்சீவி சுப்பிரமணிய சர்மா**

தம்பதியினரை வாழ்த்துகின்றோம்

ஸ்ரீமதி இலட்சுமியம்மாள்
மங்களேஸ்வரசர்மா
75, நல்லூர் குறுக்குத் தெரு
நல்லூர்.
+94770366129



ஸ்ரீமான் கா. துரைச்சாமிக்குருக்கள்
அகிலாண்டேஸ்வரி தம்பதியினர்.
அட்டகிரி வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
+94778458448, +41795510062

# யாழ். பல்கலையின் கணினி விஞ்ஞானத்துறை தொடர்பில் உயர்கல்வி அமைச்சு வெளியிட்ட அறிவித்தலால் குழப்பம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் 1991ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வெளியேறியுள்ள நிலையில், கணினி விஞ்ஞானத் துறையைப் புதிய துறையாகப் பிரகடனப்படுத்தும் உயர்கல்வி அமைச்சின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் குழப்ப நிலை தோன்றியிருக்கிறது.

உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி, புதன் கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் அடிப்படையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 17ஆவது புதிய துறையாக மொழி பெயர்ப்புக் கற்கைகள் துறையும், விஞ்ஞான பீடத்தில் 7ஆவது கற்கைத் துறையான கடற்றொழில் துறையை உடனடுத்து 8ஆவது கற்கைத் துறையாக கணினி விஞ்ஞானத் துறை சேர்க்கப்படுவதாகவும் கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும், சகல வளாகங்களின் முதல்வர்களுக்கும், சகல நிலையங்களினதும் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே, 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்தவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும், 2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி அப்போதைய உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஸ்வ வர்ணபாலவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் இருந்த 6 துறைகளில் 3 ஆவதாக கணினி விஞ்ஞானத் துறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது 7ஆவதாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட கடற்றொழில் துறையும், அதனை உடனடுத்து 8ஆவது கற்கைத் துறையாக கணினி விஞ்ஞானத்துறை புதிய துறையாக அறிவிக்கப்பட்டிருப்பது விஞ்ஞான பீடத்தில் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

இதுபற்றி ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவின் ஊடாக உயர்கல்விஅமைச்சுக்குச் சுட்டிக்காட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய வருகிறது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி டெய்சி ஜெபமலர் சின்னையா



காரைநகரைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டெய்சி ஜெபமலர் சின்னையா நேற்று (10.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான போல்-பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையாவின் (ஓய்வுபெற்ற லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வண. பிதா போல் அரியறட்ணம், ஐசக் ஜெயரட் ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ் சென்ற றோஸ், சுகிர்தம், லீலா, மாக்கிரட் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஐசக் சிற்சபேசன், பாஸ்கரசபேசன் (பொறியியலாளர்), தேவமனோகரி, பிரியதர்சினி தேவகிருபாகரன் (ஆசிரியர்- யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தி (ஆசிரியர்-யா/பரியோவான் கல்லூரி), பத்மலோயினி, காலஞ்சென்ற பத்மநாதன் (பொறியியலாளர்), தேவகிருபாகரன் (ஆசிரியர்- யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (11.06.2020) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, St. ஜேம்ஸ் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி சிவசம்பு வள்ளியம்மை

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு வள்ளியம்மை நேற்று (10.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா நாகமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (கனடா) மற்றும் சீதாலெச்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி (ஜேர்மனி), கனகேஸ்வரி, தபோகரன், சிவாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாகரன் மற்றும் அன்பரசி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனகலிங்கம் (ஜேர்மனி), பத்மநாதன் (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்), பிரேமகுமாரி (ஜேர்மனி), செம்மனச்செல்வி (ஆசிரியர், யாழ் இந்து மகளீர் கல்லூரி), பரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஸ்யந்தி-ஜெயகரன், விபுலா, வேந்தன், துஷ்யந்தன், துவாரகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், பிரியதர்சன், பிரியங்கா, பிரேமி, பிரேவின், தங்கீர்த்தனன், மேனாளனன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2020) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல் :
குடும்பத்தினர்
077 7740 443

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
26 . 04 . 1930



ஆண்டவன் அடியில்
30 . 05 . 2013

### பீதாம்பரம் ஜெகநாதன்

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் A/O - நீர்ப்பாசனத்திணைக்களம்)

திதி : தேய்பிறை சஷ்டி (11.06.2020)

ஆறுமுகரின் திருவடியில் இருந்து ஆசானாய் எம்மை வழிநடத்தும் அன்பு அப்பாவே.....................................

ஏழாண்டென்ன ஏழு ஜென்மமானாலும் எம்மை விட்டு மறையாது உங்கள் நினைவலைகள்.....................................

071 6210 346 குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்

தோற்றம்
27 . 03 . 1924



மறைவு
12 . 05 . 2020

### அமரர் திருமதி பரிபூரணம் இராசதுரை

கடந்த (12.05.2020) அன்று சிவபதமடைந்த அமரர் திருமதி பரிபூரணம் இராசதுரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.06.2020) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எம் மீளாத்துயரில் நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அத்தருணத்தில் சரீர உதவி உட்பட அனைத்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியை நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வத்தனை வளவு,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின்
26ஆம் ஆண்டு நினைவுதினம்



11.06.2020

பேராசிரியர் அழகையா
துரைராசா

அர்ப்பணிப்பு, ஆற்றல், மனிதநேயம்
போன்ற உயர் பண்புகளினூடாக எமது
கல்லூரிக்கு ஆற்றிய
மகத்தான சேவையை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்.
யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

077 171 0294


# யாழ். இந்திய தூதரகத்தின் இரு அதிகாரிகள் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் கொரோனா அச்சம் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் இணுவிலில் தங்கி நின்ற இந்தியப் பிரஜை ஒருவர் இந்தியா திரும்பிய நிலையில் கடந்த 5ஆம் திகதி அவருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது. இவ்வாறு கொரோனாத் தொற்று இருந்தவர் உட்பட யாழில் தங்கி நின்ற இந்தியப் பிரஜைகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பேரூந்தில் அழைத்துச் சென்ற இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரும், இந்தியப் பிரஜையுடன் தங்கியிருந்தபோது உயிரிழந்த மற்றுமோர் இந்தியப் பிரஜையின் இறப்பு உறுதிப்படுத்தல் சான்றிதழை வழங்கும் பணியை மேற்கொண்டவருமாக இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம் இணுவிலில் மற்றும் ஏழாலையில் சிலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை போன்று இவர்களும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு கொரோனா இல்லை எனக் கண்டறியப்பட்டால் தனிமைப்படுதல் விலக்கப்படும் எனவும் அல்லது சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-105)


மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ பட்டதாரி 1984 பிறந்த ஆசிரிய மணமகனிற்கு அரச பதவியில் உள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
**நட்சத்திரம் உத்திரட்டாதி, கிரகபாவம் 17**
தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.
**077 271 9555, 077 802 6271**

பெயர் மாற்றம்

முத்தையா செல்வராஜ் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ஆறுமுகம் செல்வராஜ் என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் ஆறுமுகம் செல்வராஜ் என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப் படுத்துகின்றேன்.
ஆறுமுகம் செல்வராஜ்


## பெறுகை அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் - 2020
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தர முன்னுரிமை என்பன கருத்தில்கொள்ளப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **2020.06.11**ஆம் திகதியிலிருந்து **2020.06.29** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணி முதல் **14.00** மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் **2020.06.11** ஆம் திகதியிலிருந்து **2020.06.29** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு **2020.06.30** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2020.08.18) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ CF/05/2020 | கனகசுந்தரம் வீதி புனரமைப்பு, மீசாலை மேற்கு. | 0.931 | 03 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.09.15 |
| 02 | NP/14/41(3)2/ CF/06/2020 | அரசடி வீதி 1 ஆம் ஒழுங்கை புனரமைப்பு, சாவகச்சேரி வடக்கு. | 0.929 | 03 மாதம் | C9/C8 | 9,300.00 | 2020.09.15 |
| 03 | NP/14/41(3)2/ CF/07/2020 | தாமோதரம்பிள்ளை வீதி இரண்டாம் வீதி புனரமைப்பு, சங்கத்தானை | 0.931 | 03 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.09.15 |
| 04 | NP/14/41(3)2/ CF/08/2020 | சப்பச்சிமாவடி குறுக்கு வீதி புனரமைப்பு, சங்கத்தானை | 0.929 | 03 மாதம் | C9/C8 | 9,300.00 | 2020.09.15 |
| 05 | NP/14/41(3)2/ CF/09/2020 | சாரதா வீதி 1ஆம் வீதி புனரமைப்பு, சங்கத்தானை | 0.929 | 03 மாதம் | C9/C8 | 9,300.00 | 2020.09.15 |
| 06 | NP/14/41(3)2/ CF/10/2020 | குஞ்சர் துரவு வீதி புனரமைப்பு, மீசாலை கிழக்கு. | 0.930 | 03 மாதம் | C9/C8 | 9,300.00 | 2020.09.15 |
| 07 | NP/14/41(3)2/ CF/11/2020 | மடத்தடி கிழக்கு ஒழுங்கை மீள்தாரிடல், சங்கத்தானை. | 0.982 | 03 மாதம் | C9/C8 | 9,900.00 | 2020.09.15 |
| 08 | NP/14/41(3)2/ CF/12/2020 | கண்டுவில் 2ஆம் வீதி 1ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு, சாவகச்சேரி நகரம். | 0.930 | 03 மாதம் | C9/C8 | 9,300.00 | 2020.09.15 |
| 09 | NP/14/41(3)2/ CF/13/2020 | மகளிர் கல்லூரி முன் வீதி புனரமைப்பு, சாவகச்சேரி நகரம். | 0.933 | 03 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.09.15 |
| 10 | NP/14/41(3)2/ CF/14/2020 | கச்சாய் வீதி 5ஆம் வீதி புனரமைப்பு, கோவிற்குடியிருப்பு. | 0.969 | 03 மாதம் | C9/C8 | 9,700.00 | 2020.09.15 |
| 11 | NP/14/41(3)2/ CF/15/2020 | கச்சாய் வீதி 1ஆம் வீதி புனரமைப்பு, கோவிற்குடியிருப்பு. | 0.391 | 03 மாதம் | C9/C8 | 4,000.00 | 2020.09.15 |
| 12 | NP/14/41(3)2/ CF/16/2020 | விநாசித்தம்பி இணைப்பு வீதி புனரமைப்பு. கோவிற்குடியிருப்பு. | 0.509 | 03 மாதம் | C9/C8 | 5,100.00 | 2020.09.15 |
| 13 | NP/14/41(3)2/ CF/17/2020 | நுணாவில் கல்வயல் 2ஆம் ஒழுங்கை புனரமைப்பு, நுணாவில். | 0.936 | 03 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.09.15 |
| 14 | NP/14/41(3)2/ CF/18/2020 | காளியாமூலை வீதி புனரமைப்பு, நுணாவில் மேற்கு. | 0.935 | 03 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.09.15 |

கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2020.06.22 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
2020.06.11

# தி.மு.க எம்.எல்.ஏ அன்பழகன் கொரோனாவால் நேற்று சாவு

*பிறந்த நாளில் இறந்த சோகம்!*

சென்னை, ஜூன் 11

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.எல்.ஏ ஜெ.அன்பழகன் நேற்று உயிரிழந்தார்.

பல நாட்களாக அவர் உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் நேற்றுக் காலை அவர் காலமானார். தனது பிறந்த தினமான ஜூன் 10இல் அவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஹெரோய்னுடன் பெண் கைதானார்

கொடிகாமம், ஜூன் 11

50 கிராம் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: ஹெரோய்ன் போதைப் பொருளை விற்பனை நோக்கத்தோடு வீட்டில் வைத்திருந்த சமயம் யாழ் பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து குறித்த பெண்ணின் வீடு முற்றுகையிடப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# குழந்தைகளுக்கான தடுப்பூசி நிலையம் தெல்லிப்பழையில்!

## நேற்று ஆரம்பித்து வைப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 11**

**தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் குழந்தைகளுக்கான தடுப்பு ஊசி சிகிச்சை நிலையம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.**

இருதய பிரச்சினை, குறை மாதத்தில் பிறந்த குழந்தைகள், பிற பகுதிகளிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் போடமுடியாத தடுப்பு ஊசிகளை இங்கு போட்டுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனைப் பணிப்பாளர் ஆர்.டி.ஜு.விமலசேன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.குமாரவேல் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு தடுப்பு ஊசி நிலையத்தை ஆரம்பித்துவைத்தனர்.



நிகழ்வில் குழந்தை மருத்துவ நிபுணர் சி.ஜெயபாலன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் இணைந்துகுழந்தைகளுக்கான தடுப்பு ஊசிகளை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இதுவரை காலமும் குழந்தைகளுக்கான தடுப்பு நிலையம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இயங்கி வந்தது.

இந்த நிலையத்தில் பிறந்த குழந்தை தொடக்கம் 16 வயதுக் குட்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பு ஊசியை இங்குஏற்றிக்கொள்ள முடியும் என்று குழந்தை மருத்துவ நிபுணர் ஜெயபாலன் தெரிவித்தார்.

நிகழ்வில பிராந்திய தொற்று நோயியலாளர் ப.பரணீதரன், தாதியர்கள், குடும்பநலமாதுக்கள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-111)

# மினி சூறாவளி தாக்கிய வீடுகளுக்கு இழப்பீடு

## *மன்னார் இடர் நிவாரண பிரிவு தெரிவிப்பு*

தலைமன்னார், ஜூன் 11

மன்னாரில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற மினி சூறாவளியால் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில். அவற்றின் சேதங்களுக்கு ஏற்ப இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்று மாவட்ட இடர் நிவாரண சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் பாதிப்புக்குள்ளான 50 வீடுகளுக்கு தலா 2 இலட்சம் ரூபாவும், நானாட்டான் பிரதேசப் பிரிவில் 26 வீடுகளுக்கு தலா 3 லட்சம் ரூபாவும், மாந்தை மேற்குப் பிரிவில் 9 வீடுகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், மடு பிரதேச பிரிவில் 8 வீடுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 6 வீடுகளுக்கு தலா 51 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் நகருக்கு மேலதிகமாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாக தெரிவித்து நிதி அமைச்சிடம் நிதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மினி சூறாவளியால் பாதிப்படைந்த ஒவ்வொரு கட்டடங்களும் அரச திட்டத்துக்கு அமைய மதிப்பீடு செய்யப்பட்டு குறைந்தது 2ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் க.திலீபன் தெரிவித்தார். (த-60)

# நயினை நாகபூஷணிக்கு 20ஆம் திகதி கொடியேற்றம்

## 30 அடியவர்களே பங்கேற்கலாம்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை நயினாதீவிலுள்ள 30 அடியவர்களுடன் மட்டும் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, அன்னதானம் வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான முன்னேற்பாட்டு கூட்டத்தின் பின்னர் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன்ஆரம்பித்து தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறவுள்ளன.

தற்போது நாட்டிலுள்ள கொரோனாத் தாக்கம் காரணமாக மேற்குறித்த நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

நயினாதீவு தனிமையான ஒரு தீவாக இருப்பதால் ஏனைய பகுதியைச் சேர்ந்தவர்களை அனுமதிப்பதன் மூலம் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவேதான் 30 அடியவர்கள் என்று எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து எவரும் திருவிழாவுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே திருவிழாவுக்கு பிற பகுதிகளிலிருந்து வருவதை அடியவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான கூட்டத்தில் வேலணைப் பிரதேச செயலர், கடற்படையினர் பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தி னர் கலந்து கொண்டிருந்தனர். (த-111)

**தேவை**

ரியூட்டறி பாவனைக்குரிய வாங்கு. மேசை தேவை. விற்பனைக்கு உள்ளோர் தொடர்புகொள்ளவும்.

**077 376 3511**

**நாகபூஷணி திருமண சேவை**
**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**

**(10.06.2020 தொடக்கம் 12.06.2020 வரை)**

டாக்ரர், இஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், ஆசிரியர், சட்டத்தரணிகள், தனியார் துறையினர் மற்றும் வியாபாரிகள் ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதங்கள் உடன் மிகப் பொருத்தமாகத் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

**A/L இரசாயனவியல் (ZOOM)**

**க.சிவத்திரன் B.Sc(Hons)**

எனது வகுப்புக்கள் ( 2022 A/L, 2021 A/L ) பாடசாலைகள், நேரடி தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள் ஆரம்பமாகினும் தொடர்ந்து ZOOM இல் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 2022 A/L | Mon, Tue, Thur, Sat | 7.30pm - 9.00pm |
| 2021 A/L | Theory - Sun, Wed, Fri<br>Paper - Mon 4.30pm - 6.00 pm | 7.30pm - 9.00pm |
| 2020 A/L | Theory (Physical) மின் இரசாயனம், அயன் சமநிலை<br>Thur, Tue, Wed. 4.30pm-6.00pm | |
| 2020, Day | Paper Class நடைபெறுகிறது<br>Daily 4.30 am - 6.00am | |

(இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் அனைத்து வகுப்புகளிலும் பங்குபற்றலாம்)



# வாழ்வாதார உதவியாக ஆடு, குட்டி அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 11

ஈழப் போரில் இருகால்களையும் இழந்து வறுமையில் பரந்தனில் வாழ்கின்ற செல்வராசா நவநீதராசா என்பவருக்கு வாழ்வாதார உதவியாக ஆடு, ஆட்டுக்குட்டி என்பனவும் அன்றாட அத்தியாவசிய பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

அகரம் உதவும் கரங்கள் நலன்புரி சங்கத்தினூடாக குடத்தனை வடக்கை சேர்ந்தவரும் தற்போது பிரிட்டனில் வாழ்கின்றவருமான குணரெட்ணம் ரிசாந் என்பவரின் நிதியில் இவை வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை அகரம் உதவும் கரங்கள் நலன்புரி சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஐ.குகன், முல்லைமாவட்ட இணைப்பாளர் செ.கஜேந்திரன், வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் ஜெ.பானு மற்றும் தொண்டர்கள் இணைந்து வழங்கினர். (த-222)

# பரந்தனில் துப்புரவு

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பரந்தன் ஏ9 வீதியின் இரு மருங்கிலும் உள்ள குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம், கரைச்சி பிரதேச சபை, தர்மபுரம் சுகாதாரப்பணிமனையினருடன் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனமான எஸ்.எல்.சி.டி.எவ். நிறுவனத்தினரும் இணைந்து துப்புரவுப் பணியில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். கொரோனா தொடர்பான விழிப்பு ணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.